முச்சந்தி முரளி



"மதியாதார் முற்றம்
மிதிச்சால்
இப்பிடியெல்லாம்
அவமானம் வரத்தான்
செய்யும் பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 136

புதன்கிழமை
10 ஏப்ரல் 2024

பங்குனி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

# தமிழ்ப் பொதுவேட்பாளர்; தெரிவு இறுதிக்கட்டத்தில்!

## கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்குவது தொடர்பான கலந்துரையாடல் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதுவரை வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்கவில்லை. ஆனாலும் மதங்களைக் கடந்து வடக்கு – கிழக்கைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஒருவரே பிரேரிக்கப்படுவார் – இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

15

## யாழ்.நகரப் பாடசாலையில் மாணவர்களுக்கு காசநோய்

### காரணம் இன்னும் தெரியவில்லை!

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாண நகரத்திலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலை மாணவர்கள் சிலருக்கு காசநோய் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களுக்கு அது எவ்வாறு பரவியது என்பதைக்

15

## யாழ். மாநகர ஆணையாளர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் கிருஸ்ணேந்திரனுக்கு எதிராக யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

15

*2023 இல் மட்டும்*

## புற்றுநோயால் யாழில் 71 பேர் உயிரிழப்பு!!!

### போதனாவின் பதில் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடம் 2023ஆம் ஆண்டு மட்டும் 776 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் 71பேர் உயிரிழந்துள்ளனர் என்று

02

## அக்குபஞ்சர் சிகிச்சை நிலையம் தடைக்கு எதிராக நடவடிக்கை

### உரிமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் அக்குபஞ்சர் சிகிச்சை நிலையத்தைத் தடை செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அதற்கு எதிராக

15

## சுமந்திரனை ஒருபோதும் அநுர அழைக்கவேயில்லை!

### அந்தக் கட்சியின் அமைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) மாநாட்டில் இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனுக்கு தனிப்பட்ட அழைப்பை எமது கட்சி விடுக்கவில்லை என ஜே.வி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராம

15

*ஐ.பி.எல். தொடரில்*

## சன்ரைசர்ஸ் அணியில் வியாஸ்காந் இணைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

நடப்பு ஐ.பி.எல். தொடரில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரர் வியாஸ்காந்த் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். இது தொடர்பான அறிவிப்பு அந்த அணியின் முகாமைத்

15



## ரமழான் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 10

புனித ஷவ்வால் மாதத்துக்கான தலைப்பிறை தென்பட்டுள்ளமையால் புனித நோன்பு பெருநாளை இன்று

02

## கடற்படையினர் தாக்குதல்; தமிழக மீனவர்களுக்கு காயம்

யாழ்ப்பாணம், ஏப். 10

கச்சதீவுக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே மீன்பிடித்த படகுகளில் ஏறிய இலங்கைக் கடற்படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி, மீன்பிடி வலைகளையும் அறுத்து சேதப்படுத்தியதாகவும் இதன்போது 10 க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் இராமேஸ்வரம் மீன

15

## மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு

16




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 ரூபாவின் கீழ் அரிசியின் விலை!

## வலியுறுத்தி கவனவீர்ப்பு



மன்னார், ஏப். 10

அரசாங்கம் உடனடியாக அரிசியின் விலையை 100 ரூபாவுக்குக் கீழ் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் வவுனியா, கிளிநொச்சி, மன்னாரில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:

இலங்கை மக்களின் அடிப்படை உணவு அரிசிச் சோறாகவே அமைந்துள்ளது. இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியால் மக்கள் கடும் உணவுப் பஞ்சத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

பெண் தலைமைக் குடும்பங்களில் இந்த நிலைமையோ இன்னுமின்னும் மோசமாகவே உள்ளது. சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், பெண்கள் அனைவரும் தமது பசியினைப் போக்குவதற்காகப் போஷாக்கற்ற உணவுகளை உண்ண வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே இலங்கை அரசு மக்களின் வேண்டுகோளையும், பசியின் கொடூர நிலையையும் கவனத்தில் கொண்டு இலங்கையில் அரிசியின் விலையை நூறு ரூபாவுக்கு கீழ் உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். மக்களின் வறுமை நிலை போக்கி மக்கள் மூன்று வேளையும் பசியின்றி சோறு உண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறோம் - என்றனர். (ம-56,110,113)



# சன்ரைசர்ஸ் வெற்றி

பஞ்சாப் அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் அணி 2 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பில் ஈடுபட பஞ்சாப் அணி தீர்மானித்தது. முதலில் ஆடிய சன்ரைசர்ஸ் அணி ஆரம்பத்தில் தடுமாறினாலும் இறுதி 10 பந்துப் பரிமாற்றங்களில் ஓட்டங்களைக் குவித்தது. இதனால் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் நிதிஷ்குமார் ரெட்டி 37 பந்துகளில் 64 ஓட்டங்களை விளாசினார். பந்து வீச்சில் அர்தீப் சிங் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலளித்து ஆடிய பஞ்சாப் அணிக்கும் ஆரம்பத்தில் ஏமாற்றமாக இருந்தாலும் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்களின் அதிரடி ஆட்டத்துடன் வெற்றியிலக்கை இறுதிவரையில் விரட்டியது. 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களையே அந்த அணியால் பெற முடிந்தது. கடந்த ஆட்டத்தில் அசத்திய சச்சங் சிங் 25 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். (ஒ-5)



# புத்தாண்டுக் காலத்தில் தடையற்ற எரிபொருள்

யாழ்ப்பாணம், ஏப். 10

புத்தாண்டு விடுமுறை காலத்தில் நுகர்வோருக்கு தடையின்றி எரிபொருளை விநியோகிக்க எரிபொருள் விற்பனை நிலையங்கள் எரிபொருளை கூடுதலாக சேமித்து வைக்க வேண்டும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கேட்டுள்ளது.

இதற்கெனஎரிபொருள்விற்பனைநிலையங்களுக்கு காசோலை மூலம் எரிபொருளை வழங்கவும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-17)

# வத்தகப்பழம் விலை சரிவு

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்.குடாநாட்டில் வத்தகப் பழத்தின் விலை திடீரென சரிந்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான வத்தகப் பழங்கள் அறுவடை செய்யப்பட்டு சந்தைக்கு எடுத்துவரப்படுகின்றன. ஒரு கிலோ வத்தகப்பழம் 50 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போதைய வறட்சியான காலநிலை காரணமாக அதிகமாக மக்கள் வத்தகப்பழகத்தை வாங்கி வருகின்றனர் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். (ச-17)

# கைதிகள் சந்திப்புக்கு விசேட நடவடிக்கை!

கொழும்பு, ஏப்.10

ரமழான் மற்றும் தமிழ் - சிங்கள புத்தாண்டு தினங்களை முன்னிட்டு சிறைக் கைதிகளைப் பார்வையிட விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுஎன்றுசிறைச்சாலைஆணையாளர் ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி ரமழான் பண்டிகையை முன்னிட்டு இஸ்லாமிய மதக் கைதிகளுக்கு மாத்திரம் உறவினர்களை பார்வையிடுவதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (எ)

# இலவசக் கல்விக்காக ஒன்றிணையவேண்டும்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

சவால்களுக்கு விடையிறுக்கும் வகையில், இலங்கையில் இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக மாணவர் சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் உட்பட பிற பங்குதாரர்களுடன் இணைந்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் செயற்படும் என்று அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

அரசாங்கம் தனது முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களைத் திரும்பப் பெறவும், சந்தை சக்திகளைவிட மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் நாங்கள் வலியுறுத்துகிறோம். இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக இந்த முக்கியமான போராட்டத்தில் எங்களுடன் சேருமாறு அனைத்து மக்களையும் அழைக்கிறோம். அனைத்து இலங்கையர்களும் அவர்களின் பின்னணி மற்றும் சமூகப் பொருளாதார நிலைகளைக் கடந்து, எல்லோரும் சேர்ந்து, கல்வி அடிப்படை உரிமையாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். இறுதியாக, கல்வி போன்ற இன்றியமையாத விடயங்களின் கொள்கை வகுப்பென்பது ஜனநாயகத்தின் கேலிக்கூத்தாக மாறவிடக்கூடாது என்பதை வலியுறுத்தி, இந்தத் திட்டத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்றுள்ளது. (அ-ம)

### புற்றுநோயால்...

யாழ்ப்பாண மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி யமுனாநந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் சரியான உணவுப் பழக்கமே புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக வருபவர்களில் மார்பகப் புற்றுநோய், கருப்பை புற்றுநோய், சூலகப் புற்றுநோய், வாய் புற்றுநோய், சுவாசம் தொண்டைப் பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய், உடல் உள் உறுப்புகளில் ஏற்படும் புற்றுநோய் எனப் பல வகையான புற்றுநோய்கள் இனம் காணப்படுகின்றன.

புற்றுநோயைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் கண்டறிந்து அதற்கான சிகிச்சை முறைகளை ஒழுங்காக மேற்கொள்ளும் போது நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் குடல் புற்றுநோய் காரணமாக 88 பேர் பாதிக்கப்பட்டு நிலையில் 7 பேர் இறந்துள்ளனர். இரைப்பை புற்றுநோயால் 40பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 5பேர் இறந்துள்ளனர். ஈரல் புற்றுநோயால் 40பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 8 பேர் இறந்துள்ளனர். சுவாசப் புற்றுநோயால் 67 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 8 பேர் இறந்துள்ளனர். மார்பகப் புற்றுநோயால் 83 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 4 பேர் இறந்துள்ளனர். கருப்பை புற்றுநோயால் 27 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 3 பேர் இறந்துள்ளனர். கருப்பை கழுத்து புற்று நோயால் 48 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 3 பேர் இறந்துள்ளனர்.

மேலும் ஆண்களில் சிறுநீர்ப்பை புற்றுநோயால் 10 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் குருதிப்பட்டி நோயால் 37 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆண்களில் முன்னாண் மற்றும் நரம்பியல் சார்ந்த புற்று நோய்களால் 30 பேர் பாதிக்கப்பட்டு, 3 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தைரொய்ட் புற்றுநோயால் 20 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் 2 பேர் உயிரிழந்துள்ளனர் - என்றார். (அ-ஓ-35)

### ரமழான்...

கொண்டாடுவதற்கு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்றுக் கூடிய பிறைக்குழு ஏகமனதாகத் தீர்மானித்தது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் நிலத்தொடர்பு; திட்டவரைவு ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஏப்.10

**இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் உத்தேச தரைப் பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பான ஆய்வு அறிக்கை இந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.**

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் இந்தியப் பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. தரைப்பாலம் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் என்பதுடன், கடல்சார் கப்பல் அல்லது விமான போக்குவரத்துடன் ஒப்பிடும்போது குறைந்த அளவான போக்குவரத்து செலவுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

## தாய்லாந்துக்கு மைத்திரி

கொழும்பு, ஏப்.10

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாய்லாந்துக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று அதிகாலை நாட்டிலிருந்து தாய்லாந்து பாங்கொக் நகருக்குப் புறப்பட்டுள்ளார். இந்தப் பயணத்தில் மைத்திரிபால சிறிசேனவுடன் 9 பேர் கொண்ட குழு ஒன்று சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இளையோருக்கு வழி விடுங்கள்!

### சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.10

தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய காலம் உருவாகியுள்ள நிலையில் இளைஞர், யுவதிகள் சுதந்திரமாக அரசியலில் ஈடுபடக்கூடிய பின்னணியை உருவாக்குதல் காலத்தின் தேவையாகும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 60 வயது முதல் 90 வயது வரையான 57 பேர் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றனர். நாற்பது வயதுக்கும் குறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 26 மட்டுமே. வயது முதிர்ந்தவர்கள் இந்தச் சூழ்நிலையை இளையோருக்கு உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அத்துடன் நாட்டில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமும் மிகவும் வரையறுக்கப்பட்ட அடிப்படையிலேயே காணப்படுகிறது. இதனையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-இ)

## கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஏப்.10

கம்பஹா, கட்டுகஸ்தர பிரதேசத்தில் நேற்று இனந்தெரியாத ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நபர் கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (ச-இ)

## பட்டாசு வகைகளின் தரத்தை பரிசீலிக்குக

நாட்டில் விற்பனை செய்யப்படும் பட்டாசு வகைகளின் தரத்தைப் பரிசீலனை செய்யுமாறு கண் மருத்துவர்கள் சங்கத்தால் இலங்கை தர நிர்ணய சபையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் ஏற்படக்கூடிய விபத்துகளைத் தவிர்க்கும் முகமாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அநேகமான பட்டாசு வகைகளின் பொதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கப் பொருள்கள் அவற்றில் உண்மையாக இருப்பதில்லை. இதனால் பட்டாசு வெடிக்கும் போது அநேகர் விபத்துகளை சந்திக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)


## வாக்காளர் பட்டியல் பணிகள் ஆரம்பம்!

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் நேற்று முதல் மே 10 ஆம் திகதி வரை இடம்பெறும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க முடியாதவர்களுக்கு இன்று முதல் மே 10 ஆம் திகதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் அலுவலகம் அல்லது தேர்தல் அலுவலகத்துக்குச் சென்று பெயர் உள்ளீடு செய்து கொள்ளலாம். இல்லாவிடின் தேர்தல் திணைக்களத்தின் இணையத்தளத்தில் சென்று பெயரை உள்ளிடலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## ஊழலற்ற ஆட்சியே மக்களின் தெரிவு!

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



தற்போதைய அரசாங்கம் மக்களால் நிறுவப்படாது செயற்கையாக உருவாக்கப்பட்டது. வரப்போகும் தேர்தலில் ஊழலற்ற, மக்கள் நேய ஆட்சியை உருவாக்கவே மக்கள் விரும்புகின்றனர். - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்றுறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக ஒன்பது இலட்சம் பேர் தொழில்களை இழந்துள்ளனர். மத்தியவங்கி அறிக்கையின் அடிப்படையில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 57 இலட்சம் பேர் வறுமையில் வாடுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் எவ்வித கரிசனையும் காட்டவில்லை வரப்போகும் தேர்தல் சுயாதீனமாக நடைபெறவேண்டும். தேர்தலில் ஊழலற்ற, மக்கள் நேய ஆட்சியே உருவாகவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




முந்தி ஒவ்வொரு ஊரிலையும் மைனர்க் குஞ்சுகள் இருக்கிறவை. ஊரையே தாங்கள் தான் குத்தகைக்கு எடுத்தமாதிரித்தான் அவையின்ர போக்கும் நடப்பும் இருக்கும். எல்லாப் பிரச்சினையளுக்கையும் வேட்டியை மடிச்சுக் கட்டிக்கொண்டு, வலியப் போய் தலையை ஓட்டி, எல்லாத்தையும் குழப்பியடிச்சு அதில ஏதும் ஆதாயம் தேடுறதும், தேடுவாரில்லாமல் கிடக்கிற சொத்துகளை ஆட்டையைப் போட்டு தங்கட சொத்தா மாத்துறதும்தான் அவையின்ர தொழில். இஞ்சையும் ஒரு மைனர் அமைச்சர் இருக்கிறார். கட்சியின்ர பேர்ல மட்டும் ஜனநாயகம் இருந்தாலும், 'நாங்கள் ஜனநாயக நீரோட்டத்துக்க நீந்திறம், தியேட்டர் கரண்ட் பில்லில சுழி ஓடுறம்' எண்டெல்லாம் கதைவிட்டாலும், அவருக்கு சண்டித்தனத்தில தான் நம்பிக்கை கூட. கொரோனாக்கு பிறகு வடமராட்சியில மீனவர் போராட்டத்துக்குப் போய் வேட்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு சண்டித்தனம் காட்ட வெளிக்கிடேக்க, பதிலுக்கு மீனவரும் முறுக, கடைசியில அவரின்ர பாதுகாப்புக்கு நிக்கிறவைதான் அவரைப் பத்திரமா அங்கையிருந்து கொண்டந்தவை.

அதுக்குப் பிறகாவது, தன்ர வயசை நினைச்சு கொஞ்சம் ஆத்திரத்தை அடக்கி வைச்சிருக்க ஆள் பழகியிருக்கோணும். ஆனால் துவக்கைத் தூக்கி தன்ர சனத்தையே போட்டுத்தள்ளின கை துடிச்சுக் கொண்டுதான் இருக்கும் போல. அதுக்குப் பிறகும் வேற சில இடங்களில ஆள் உந்தச் சண்டிக்கட்டு வெருட்டலை விடேலை. எல்லா இடத்திலையும், சண்டிக்கட்டுச் சண்டித்தனம் வேகாது தானே. அதிலையும் வெயிலுக்க வெந்துகொண்டு, சுண்ணாம்புக்கல் அகழக்கூடாது எண்டு போராடின சனத்திட்ட எப்பிடி உந்தச் சண்டித்தனம் எடுபடும்? உப்பிடி சுண்ணக்கல்லை வெட்டி எடுத்து சிமெந்து பக்டரிக்கு குடுத்தால், ஊருக்குள்ள கடல்தண்ணி பூந்து, எல்லாத்தையும் நாசமாக்கிப்போடும் எண்டதுதான் சனத்தின்ர பிரச்சினை. ஒரு பக்டரியைக் கட்டுறதெண்டால் சனத்துக்கு சிக்கல் வராமல் கட்டவேணும். சனத்தையும், ஊரையும் அழிச்சுப்போட்டு, ஊரையும் நிலத்தையும் தங்கட கொமிசனுக்காக வந்தான் வரத்தானுக்கெல்லாம் குடுத்தால் சனம் எதிர்க்கத்தான் செய்யும்.

பூநகரியில திறக்க இருக்கிற சிமெந்து பக்டரிக்கும் உள்ளால காசு மாறியிருக்காம். 'எல்லாம் நான் வெண்டுதருவன்' எண்டு சண்டித்தன அமைச்சர் சொன்னதைக் கேட்டு, கொம்பனிக்காரரும் 'பெரிசா' கவனிச்சிருக்கினம் போல. அந்த விசுவாசத்துக்காக சனத்தை அடிச்சு மிதிச்சுப் போட்டு, பக்டரியை திறக்க வெளிக்கிட்டா என்ன நடக்கும் எண்டதை சனம் வடிவாக் காட்டிப்போட்டுது. அண்டைக்கும் சனம் எதிர்க்க ஆள் அவையை வெருட்டுறதுக்காக சண்டிக்கட்டை கட்டிக்கொண்டு சனம் நிக்கிற பக்கமா போயிருக்கிறார். உடன போராடின பொம்பிளையளில ஒராள் மைக்கை வாங்கி 'மீன்குஞ்சு காட்டி ஏமாற்றிய அமைச்சரே, இங்கே எதைக்காட்டி ஏமாற்ற வருகிறாய்?' எண்டு கேட்டதும் தான் தாமதம், உடனேயே ஆள் சண்டிக்கட்டை அவிட்டு கால்மட்டும் மறைச்சவராம். அதுக்குப் பிறகுதான் சனத்தோட பிடுங்குப்பட்டு ஹெல்மெட்டும் இல்லாமல் மோட்டார் சைக்கிளில தப்பினம் பிழைச்சம் எண்டு அமைச்சர் ஓடியிருக்கிறார்.

சண்டிக்கட்டுக்காலமெல்லாம் மலையேறிட்டுது எண்டது இனியாவது மீன்குஞ்சு அமைச்சருக்கு விளங்கினால் சரி

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் போர்வையில் மன்னார் வளங்கள் அழிப்பு

*அமெரிக்கச் சூழலியல் குழுவுக்கு மன்னார் பிரஜைகள் குழு சுட்டிக்காட்டு*

**மன்னார், ஏப்.10**

**அபிவிருத்தித் திட்டங்கள் என மன்னார் மாவட்டத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் ஒவ்வொன்றும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் திட்டங்களாகவே காணப்படுகின்றன. இதனால் மன்னார்த் தீவும் விரைவில் கடலுக்கு இரையாகும் நிலை தோன்றும்.**

-இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்திலிருந்து மன்னாருக்கு வருகை தந்திருந்த பொருளாதாரச் சூழலியல் அதிகாரி கிறிஸ்தோபர் கூச் தலைமையிலான அமெரிக்கச் சூழலியல் குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பில் மன்னார் பிரஜைகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கம் அபிவிருத்தி என்ற போர்வையில் மன்னார் தீவில் முன்னெடுக்கும் காற்றாலை மற்றும் கனியவள மணல் அகழ்வு உள்ளிட்டவற்றால் மன்னார் மக்களின் வாழ்வாதாரம் பறிக்கப்படுகிறது.

மன்னார் மக்கள் குடியிருந்த, குடியிருக்கின்ற காணிகளையும், வயல்களையும் அரசாங்கம் கையகப்படுத்துவதால் மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கும் ஆளாகியுள்ளனர் என்றும் அவர்கள் விளக்கினர். (ச-60)

## முள்ளியவளை தபால்நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் எப்போது?

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளை தபால்நிலையம் தொடர்ந்தும் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. 1883ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரு உபதபால் நிலையமாக இயங்கிய இந்த நிலையம் முள்ளியவளையில் பல இடங்களில் இயங்கியபோதும், இன்றுவரை வாடகை வீட்டிலேயே தனது அலுவலகங்களை நடத்தி வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரிவிலேதான் முள்ளியவளை கிராமம் உள்ளது.

இங்கே பத்து வட்டாரங்களும், கொண்டைமடு, கறுக்கேணி, கேப்பாபுலவு, வற்றாப்பளை கிராமங்களான தண்ணீரூற்று, ஊற்றங்கரை, மாமூலை, நீலகண்டபுரம், குமாரபுரம், நீராவிப்பிட்டி, கிஜறாபுரம், களிக்காடு உட்பட 9 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள முட்லமுனை கிராமமும் முள்ளியவளை தபால் நிலையத்துக்கு கீழேதான் தபால் சேவைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

22 கிராமசேவையாளர் பிரிவை இந்த நிலையம் உள்ளடக்கியுள்ளது. இந்த தபால்நிலையம் உப தபால் நிலையமாக இருந்து கடந்த 1980ஆம் ஆண்டு தபால் நிலையமாக தரம் உயர்த்தப்பட்டது. அதன் பின் நிரந்தரக் கட்டடம் ஒன்றும் தபால் அதிபருக்கான தங்குமிடமும் தேவை என்ற கோரிக்கையை அடுத்து தபால் திணைக்களத்தினால் முள்ளியவளை பிரதேசசபையின் விளையாட்டு மைதானம், பொதுநூலகம், வன இலாகா அலுவலகம் ஆகியவற்றின் அருகே இரண்டு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு நிலஅளவுச் செயற்பாடு முடிவுற்று 1983ஆம் ஆண்டு கட்டடம் அமைக்க என ஒரு தொகை பணமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.





காலப்போக்கில் குறிப்பிட்ட விளையாட்டு மைதானம் உட்பட அதனை அண்டிய சகல இடங்களும் படிப்படியாக மாவீரர் துயிலும் இல்லமாக மாற்றப்பட்டன. அதனால் தபால் நிலையம் அமைக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. இன்று அதே மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது. ஆதலால் குறிப்பிட்ட காணியை விடுவித்து அதில் நிரந்தரமாக முள்ளியவளை தபால்நிலையம் அமைக்கப்பட வேண்டும். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பிட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட காணி இராணுவ படை முகாமுக்குள் அகப்பட்டு இருப்பதாலும் குறிப்பிட்ட அந்த நிலம் வெற்றிடமாகவே இருக்கின்றது. அதற்கு எதிர்த் திசையில் உள்ள தனியாருக்குச் சொந்தமான ஒரு வீட்டிலேயே மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா வாடகைக்கு தபால் நிலையம் இயங்குகின்றது. இந்த விடயத்தில் வடமாகாண ஆளுநர் நிரந்தர தீர்வைக் காணவேண்டும்.

**வே.ம.இந்திரநாதன்**, முள்ளியவளை



திருகோணமலை, ஸ்ரீ மாதுமையம்பாள் உடனுறை திருக்கோணைநாத பெருமானின் ஆலய பங்குனி உத்தர பிரமோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. (ப-50)



நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ப-66)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் 4 ஆம் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. (ப-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நீண்டநாள்களாக வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். உற்சாகமாக இருப்பீர்கள். காரியம் நல்லபடி முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த முக்கியமான காரியம் ஒன்று அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். உறவுகளால் நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மனம்விட்டுப் பேசி அவர்களை உற்சாகப்படுத்துவீர்கள். கனிவான அணுகுமுறை அவசியம். இன்று மகாலட்சுமியை வழிபட நன்மைகள் கூடும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிடிவாதப் போக்கு மன அமைதியை பாதிக்க வாய்ப்புண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது. காரியம் அனுகூலமாக முடியும்.


**விருச்சிகம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். நண்பர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

**தனுசு:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பண உதவி கிடைக்கும். முருகப்பெருமானை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் பிற்பகலுக்கு மேல் அனுகூலமாகும்.

**கும்பம்:** உதவி கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். குடும்பத்துடன் இறைவழிபாட்டில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும். நண்பர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சி தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

மானிப்பாயில் வயோதிப மாது ஆடையின்றி சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கணவன் பிள்ளைகளை விடுத்து, தனியே வசித்து வந்த நிலையில் 63 வயதான சாந்தினி என்னும் வயோதிபப் பெண்ணே இவ்வாறு சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அயலவர்கள் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சடலத்தை மீட்டுள்ளனர். (ஓ-125)


## வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
## நெடுங்கேணி
## பதிவிலக்கம்-V/263

### பகிரங்க ஏல விற்பனை

வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான டிப்பர் வாகனம் விற்பனை செய்யப்படவுள்ளது. அசோக்லேடன் டிப்பர் வாகன இலக்கம்-NP-JC-5961. பார்வை இடும் இடம்-வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைப்பணிமனை நெடுங்கேணி. காரியாலய நேரத்தில் (காலை 8.30 - 4.30) வரை பார்வை இடலாம். ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புபவர்கள். 29.04.2024 ந் திகதி காலை 10.00 மணிக்கு முன் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1000.00 (ஆயிரம்) செலுத்தி பற்றுசீட்டையினை பெற்றுக்கொள்ளவும்.


இவ் ஏல விற்பனை ஆனது 30.04.2024 ந் திகதி காலை 10.00 மணிக்கு காரியாலய மண்டபத்தில் நிர்வாக உறுப்பினர்கள் முன்னிலையில் பகிரங்க ஏல விற்பனையில் விடப்படும்.

தொடர்புகளுக்கு
024 205 3196
077 950 0916

கூட்டுறவு சேவையிலுள்ள தலைவர்
வவுனியா வடக்கு பல நோக்கு
கூட்டுறவுச் சங்கம்

(CR 42186) V-1


## மரண அறிவித்தல்



அன்னையின் மடியில்
27 ✶ 08 ✶ 1940

இறைவன் அடியில்
05 ✶ 04 ✶ 2024

கனடா, டொரின்டோவில் காலமானார்

### அமரர் சுப்பிரமணியம் செல்வராசா

அவர்கள் 05.04.2024 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.


அன்னார் இல. 369, கே.கே.எஸ். வீதியைப் பிறப்பிடமாகவும், நாவலர் வீதியை வதிவிடமாகவும் கொண்டவர். அன்னார் தவமணிதேவியின் பாசமிகு கணவரும், நாகேஸ்வரன், விக்னேஸ்வரன், சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உஷா, திருவேனி, தவஞ்சனா ஆகியோரின் மாமனாரும், ஆரணி, நிவேதா, நிலானி, ஹரிஷ், வர்ஷா, ஹரிஹரன், கஜானி, அபிஷன், ஜெனனி ஆகியோரின் அன்பு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இன்று (10.04.2024) பிற்பகல் 7.00 மணிக்கும் 9.00 மணிக்கும் இடையில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம்
23 • 11 • 1947

மறைவு
09 • 04 • 2024

### கதிரவேற்பிள்ளை கோவர்த்தனராஜா

கந்தர்மடம் பழம் வீதி உடையார் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேற்பிள்ளை கோவர்த்தனராஜா நேற்று (09.04.2024) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை-மதியாபரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜகுமாரி (ராதா) அவர்களின் ஆருயிர்க்கணவரும் தனுஷனின் (பொறியியலாளர்-கட்டார்) பாசமிகு தந்தையும் மதனாவின் (கட்டார்) அன்பு மாமனாரும் தஷானிகா, ரிஷ்ரிகாந் (கட்டார்) ஹன்சிகா, கோஷன், சர்விகா, கவினாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் மகேந்திரராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லலிதாதேவி, தங்கம்மா, ராஜேஸ்வரி, கமலேஸ்வரி, உதயகுமாரி மற்றும் காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, சபாநாதன், சிவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் தாரணி-கபிலன், முகுந்தன்-மதுரா, நந்தினி, குமுதினி, பவானி, நளினி, சுமதி, நிகிலா, ஹர்சனன், சுதர்சன், சிவேந்திரா, றோகன், பவி, சுமங்கலா, நிரோஷன் ஆகியோரின் சிறிய தந்தையும் பவித்ரா-திவாகர் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகன் - தனுஷன்
021 222 9538, 077 600 9901

(CS 168) V-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
10 • 03 • 1932

மறைவு
08 • 04 • 2024

### நாகம்மா கந்தையா

மானிப்பாய் வடக்கு, உச்சியோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா கந்தையா அவர்கள் நேற்று முன்தினம் (08.04.2024) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - அம்மாச்சி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கந்தையா (தவில் வித்துவான்) அவர்களின் அன்பு மனைவியும், சோதிநாதன் (ஜேர்மனி), பிறேமா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தயாயரும், ஜேந்தி (ஜேர்மனி), பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், பிறிச்சிட்டா (ஜேர்மனி), ஜெனா (ஜேர்மனி), ஜெரோன் (ஜேர்மனி), தனுஷன் (பிரான்ஸ்), நொயலின் (பிரான்ஸ்), லவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உச்சியோடை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன்: 4915739353807, 0762019786
மகள்: 33641898058

(CS 00173) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டிலிருந்து வந்தவர் குளியலறையில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 10
சுவிஸிலிருந்து வந்திருந்த ஒருவர் வீட்டின் குளியலறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நவாலி தெற்கைச் சேர்ந்த உதயகுமார் (வயது - 55) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தனது தாயாரைப் பார்ப்பதற்காக நேற்றுமுன்தினம் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளார். இந்த நிலையில் குளியலறைக்குச் சென்ற அவர் பின்னர் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளை வலி. கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங் கம் மேற்கொண்டார். (அ-ஓ-26)

# ஜனாதிபதித் தேர்தல்: கட்டுப்பணம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 10
ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் 2.6 மில்லியன் ரூபா கட்டுப்பணமாக அறவிடப்படவுள்ளது. சுயாதீன வேட்பாளர்களிடமிருந்து 3.1 மில்லியன் ரூபா அறவிடப்படவுள்ளது. (அ-ஓ-6)

# மருதடி விநாயகர் சப்பரம் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 10
மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய சப்பரம் வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மாலை திருவிழா இடம்பெற்று இரவு 08.30 மணியளவில் சப்பர ஸ்தபதியை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.
சங்குவேலி பழனி சிற்பாலய ஸ்தபதி ஆசாரி சரவணபவன் அருளகனுக்கு 'விஸ்வகர்ம வித்தகன்' எனும் சிறப்பு பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.
எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது. தேர்த் திருவிழா மு.ப. 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசையை தொடர்ந்து உள்வீதி வலம் வந்து மருதடி விநாயகப் பெருமான் மதியம் 12 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார். (அ-ஓ-இ)

# காய்ச்சலால் மாணவி சாவு

யாழ்ப்பாணம், ஏப். 10
காய்ச்சல் காரணமாக மாணவி ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.
சுன்னாகத்தைச் சேர்ந்த சிறிரங்கநாதன் மதுமிதா (வயது - 16) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 7ஆம் திகதி இடையிடையே காய்ச்சல் ஏற்பட்டதால் நேற் றுமுன்தினம் காலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். அன்றிரவே அவர் உயிரிழந்துள்ளார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண் டார். உடற்கூற்று மாதிரி இறப்பைக் கண்டறிவதற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-26)


## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
## சபை நிதி - 2024

1) தலைவர். உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு. வலிகாமம் தெற்கு பிரதேசசபை. சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சூரியகல தொகுதி பொருத்துவதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார். விலைக் கேள்வியானது தேசியப்போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.

2) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
   1. கேள்விதாரர் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையில் (Sri Lanka Sustainable Energy Authority - SLSEA) Solar System வழங்குநராக பதிவு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
   2. கேள்விதாரர் சூரிய கல தொகுதி சார்பாக பின்வரும் விடயங்களில் (Design, Planning, Supplying. Installing, Testing, Commissioning and Maintenance) மேற்கொள்வதில் குறைந்தது 02 வருட அனுபவம் உடைய கம்பனியாக இருத்தல் வேண்டும்.
   3. வழங்குநர் முழு சூரியகல அமைப்பினையும் பராமரிக்கக் கூடிய உள்நாட்டு முகவரை கொண்டிருப்பதுடன் இரு வார காலத்தினுள் உதிரிப்பாகங்களை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
   4. இலங்கையில் சூரிய கல உற்பத்தி மற்றும் அது சார்ந்த உதிரிப்பாகங்கள் வழங்குதல் தொடர்பான திருப்திகர சேவைப்பதிவை கொண்டிருத்தல் வேண்டும்.

3) ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் சுன்னாகத்தில் அமைந்துள்ள **வலிகாமம் தெற்கு பிரதேச சபை** (தொலைபேசி 021-2240017) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

4) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணமொன்றை **வலிகாமம் தெற்கு பிரதேச சபை. சுன்னாகம்** என்னும் முகவரியில் 10.04.2024 ஆம் திகதியிலிருந்து 24.04.2024 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 3,500.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

5) விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர். வலிகாமம் தெற்கு பிரதேச சபை. சுன்னாகம் எனும் முகவரிக்கு 25.04.2024 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.** அல்லது **அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும்.** பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

6) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள் கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

7) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணை வைப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீடு (VAT நீங்கலாக) (Mn) | ஒப்பந்த காலம் | கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41/VSPS/01/2024 | Supply and Installation of Roof top solar system(40kw) at chunnakam sub office, valikamam south pradeshiya sabha, chunnakam | 5.950 | 30 நாட்கள் | 63 நாட்கள் | 27.06.2024 | 60,000.00 | 25.07.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
**10.04.2024**

(cr.42183) (N-1)



## சேவை நலன் பாராட்டு



1989 ஆம் ஆண்டிலிருந்து 2024
வரையான 35 வருடங்கள்
யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு
உத்தியோகத்தராக எம்மோடு பணியாற்றி
வந்த எமது சங்கத்தின் சிரேஷ்ட
உறுப்பினராகிய
**துரைராஜா**
**பிறேம்குமார்**
அவர்களின் சேவையைப் பாராட்டி
வாழ்த்துவதுடன்
அகவை அறுபதில் (10.04.2024) தொடங்கிய ஓய்வுக்காலம் சீரும்
சிறப்புமாக அமைவதற்கு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர்: பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், யாழ். பல்கலைக்கழகம்.



## First Year Remembrance Anniversary
10th April 2024
**CHRISTINE RATNAVATHY ANTON**
(Anton Amma)



Born to Christ - 15 th July 1932
Called to Glory - 10 th April 2023
"If we live, it's to honour the Lord, And if we die, it's to honour the Lord. So, whether we live or die, we belong to the Lord" (Romans 14:8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# மருத்துவத் தவறுகளுக்கும் நீதியில் பாகுபாடா?

யாழ்ப்பாணத்தில் 'அக்குபஞ்சர்' சிகிச்சை மேற்கொண்ட நபரொருவர் உயிரிழந்ததையடுத்து, அந்த மருத்துவ நிலையத்தின் அனுமதியை ரத்துச்செய்வதாக அறிவித்துள்ளார் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர். மருத்துவத் தவறால் ஒருவர் உயிரிழப்பது என்பது பாரதூரமான விடயமே. அத்தகைய மருத்துவ நிலையங்கள் மீதும், சிகிச்சை நிலையங்கள் மீதும் தடைவிதிப்பதானது தக்க நடவடிக்கையே. இதில் பாரபட்சங்களுக்கும், பரிந்துரைப்புகளுக்கும் இம்மியும் இடமில்லை தான். ஆனால், அனைத்து மருத்துவத் தவறுகளுக்கும் நீதி சமானமாக நடைமுறைப்படுத்துகின்றதா? என்று கேட்டால் அதற்குரிய பதிலைத் தெளிவுபடுத்தவேண்டிய பொறுப்பு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு இருக்கவே செய்கின்றது.

மேற்படி அங்குபஞ்சர் நிலையத்தில் எடுத்துக்கொண்ட சிகிச்சையால் ஏற்பட்ட கிருமித்தொற்றால்தான் அந்த நபர் உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. ஆனால், இந்த உயிரிழப்புக்கு முன்பாக சுமார் 20 க்கும் மேற்பட்ட நாள்கள் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்றார். மூன்று அல்லது நான்கு நாள்கள் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற ஒரு நோயாளி இறந்தால், அந்த இறப்பில் பொறுப்புச் சொல்ல வேண்டிய 'தார்மீகக் கடமை' அந்தந்த மருத்துவமனைகளுக்கு இருக்கவே செய்கின்றது. இவ்வாறிருக்கையில் 20க்கும் மேற்பட்ட நாள்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று அதன் பின்னர் இறந்துபோன நோயாளியின் இறப்புக்கு அக்குபஞ்சர் மருத்துவமே காரணம் என்று முற்றுமுழுதாக விரல் நீட்டிவிடமுடியாது. அவ்வாறு அக்குபஞ்சர் மருத்துவம்தான் காரணம் என்றால், அதற்குரிய மருத்துவக் காரணிகளை மருத்துவத் தவறுகளை முறைப்படி குற்றஞ்சாட்டுகின்ற தரப்பினர் எண்பித்திருக்க வேண்டும். அப்படி எந்தவொரு தகவல்களையும் 'முறைப்படி' ஊடகங்களுக்குப் பகிரங்கப்படுத்தாமல்- மக்களுக்குத் தெளிவுபடுத்தாமல், 'அக்குபஞ்சரில் ஏற்பட்ட மருத்துவத் தொற்றால்தான் இந்த இறப்பு சம்பவித்தது' என்று தெரிவித்துவிட்டுக் கடந்துபோகும் மனோநிலையால் வலிந்து ஏற்படுத்தப்பட்டுள்ள 'மருத்துவப் பதற்றம்' மருந்தில்லா மருத்துவத்துக்கு எதிரான சதி நடவடிக்கையா? என்ற ஐயப்பாட்டை மக்களிடம் எழுப்பவேசெய்யும்.

எல்லாவற்றையும்விட, இதே யாழ்ப்பாணத்தில் மேற்கத்தேய மருத்துவமுறைத் தவறால் தனியார் ஆங்கில மருத்துவமனைகளில் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.அந்த உயிரிழப்புகளுக்கு குறித்த மருத்துவமனைகளின் தவறுகளே முழுக்காரணம் என்று ஆதாரபூர்வமாக எண்பிக்கப்பட்ட பின்னரும் இன்னமும் அந்த மருத்துவமனைகள் பெரும் சனத்திரளுடன் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டே இருக்கின்றன. அவற்றுக்கு ஏன் சுகாதாரத்திணைக்களம் தடைபோடவில்லை? ஆக, மருத்துவத் தவறால் இறப்புகள் சம்பவித்தாலும் அதில் ஆங்கில மருத்துவத்துக்கு ஒரு நீதியும், சுதேச மருத்துவத்துக்கு இன்னொரு நீதியும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்ற கேள்வி எழுகின்றதல்லவா..? மருத்துவத் தவறுகளை பத்துடன் பதினொன்றாகக் கடந்துவிடமுடியாதுதான். ஆனால், ஆங்கிலமருத்துவமாக இருந்தாலும் சரி, சுதேச மருத்துவமாக இருந்தாலும் சரி நீதி இறுக்கமாக, ஒரேவகையில்நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இல்லாவிடில் சுகாதாரத்துறையின் நீதி, சுதேச மருத்துவத்தை விழுங்குவதற்காக, ஒடுக்குவதற்காக மட்டுமே பிரயோகிக்கப்படுகிறதா என்ற ஐயத்தை உறுதிசெய்வதாக அமைந்துவிடும்.

இவ்வளவு ஏன்... யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒரு பச்சிளம் பாலகி தன் கைகளை மணிக்கட்டுடன் இழந்திருந்தாளே. அதற்கு நீதிகேட்டு யாழ்ப்பாணமே கொதித்துப் போயிருந்ததே. அதற்கெதிராக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் இதுவரை எடுத்த நடவடிக்கைதான் என்ன? ஆக, மருத்து வத் தவறுகளுக்கும் மறுபக்க நீதியொன்று உள்ளதா...?





## பாடசாலைகளில் இணையும் மாணவர்தொகை சரிவு

கொழும்பு, ஏப்.10

**கடந்த பத்து வருடங்களுடன் ஒப்பிடுகையில் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் இணைந்துகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை தற்போது சுமார் 40 ஆயிரமாகக் குறைந்துள்ளது என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளதாவது:-

கல்வி அமைச்சின் தரவுகளுக்கமைய முதலாம் தரத்துக்கு அனுமதிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது. 2021ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கு 3லட்சத்து 4105 பிள்ளைகள் அனுமதிக்கப்பட்டனர். 2022 ஆம் ஆண்டில், முதலாம் தரத்துக்கு அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை 2லட்சத்து 92,216 ஆக காணப்பட்டது.

இதேவேளை, குடும்ப சுகாதார பணியகத்தின் தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில், இலங்கையில் 2 லட்சத்து 58,235 பேர் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர். புதிதாகத் திருமணமான தம்பதிகள் கூட குழந்தைகளைப் பெறுவதை நிறுத்திவிட்டனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது - என்றார்.

(ச-இ)

## புலம்பெயரிகளால் குவிகிறது டொலர்



2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கைக்கு அனுப்பிய பணம் கணிசமாக அதிகரித்துள்ளது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். புலம்பெயர் தொழிலாளர்கள் இந்த ஆண்டில் அனுப்பிய மொத்தத் தொகை 1.53 பில்லியன் டொலரை எட்டியுள்ளது. இது கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் 8.7 வீத அதிகரிப்பாகும்- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ச-இ)

## மின்திருத்த சட்டவரைவு அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, ஏப்.10

மின்சார சீர்திருத்த சட்டவரைவுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் தகவலை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## நலன்புரி நிலையங்கள் இவ்வருடம் மூடப்படும்!

போரின் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்கள் அனைத்தும் இந்த வருடம் மூடப்படும் என நகர வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## பொருள்களின் விலை தளர்வு!

கொழும்பு, ஏப்.10

எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு பல அத்தியாவசிய பொருள்களின் விலைகளை குறைத்துள்ளது லங்கா சதொச நிறுவனம்.

ஒரு கிலோ காய்ந்த மிளகாய் 300 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 850 ரூபாவாகும். சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ வெங்காயத்தின் விலை 120 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 375 ரூபாவாகவும் இந்தியா மற்றும் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 445 ரூபா எனவும் ஒரு கிலோ வெள்ளைப் பூண்டு 15 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 680 ரூபாவாகவும் ஒருகிலோ உருளைக்கிழங்கு 10 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 165 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

11.04.2024

**வியாழக்கிழமை**

**பங்குனி 29**

சுபநேரம் : 07.36 - 09.06

ராகுகாலம் : 01.36 - 03.06

**நாளொரு நல்வார்த்தை**

அஞ்சி நடுங்கி
கொண்டிருப்பவனால்
சிறிய குட்டையைக் கூட
கடக்க முடியாது.

– சாணக்கியன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தாயின் மடியில் 06 . 05 . 2001



காலன் பிடியில் 03 . 04 . 2024

### அலெக்ஸ் ஜனார்த்தனன் விருஷன்

லண்டனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அலெக்ஸ் ஜனார்த்தனன் விருஷன் கடந்த (03.04.2024) புதன்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் அலெக்ஸ் ஜனார்த்தனன் - பாலரூபி தம்பதியரின் அன்புச் செல்ல மகனும், இந்திரன் காலஞ்சென்ற சன்னதிமலர், மற்றும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும், உதயகுமார் கிரிஜா (லண்டன்), ஜெயக்குமார் ஜெயரஞ்சனி (இத்தாலி) சிவகுமார் துஷ்யந்தினி (லண்டன்), வரன் அனுசியா (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் ரஞ்சனி, நித்தியானந்தன் காலஞ்சென்ற ரஜனி மற்றும் மரியதாஸ் ரதி, காலஞ்சென்ற கௌரி மற்றும் யோகராசா சசி (லண்டன்), தயாபரன் சுசி (லண்டன்), முத்துராமன் கீதா (கொழும்பு), ஜெயமோகன் நளினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்ற பிரதீபன் மற்றும் பார்த்தீபன், சஜீபன், நிசா, ஜனோதீபன், ஜென்சிகா, ஜங்கையி, யஷோ, யதுசன், தனுசன், தினுஜா, சிந்துஜன், சுகிர்தன், லிஷானி, நிக்ஷிதா, அக்ஷயா, அன்சிகா, அபிநயா ஆகியோரின் பாசமிகு உடன்பிறவா சகோதரனும், காலஞ்சென்ற நிதர்சன் மற்றும் அஜிர்தன், பிரசாந், மயூரா, பிரவீனா, டிஷாந், டன்சிகா, கிஷானி, ஹரிணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கௌதமி, கஜனி, ஆதவன் நிதுஜா, கபிலன், வசீகரன், ரூபன் ஆகியோரின் பாசமிகு மைத்துனனும், திபிஷான், அபினாஷ் ஆகியோரின் சித்தப்பாவும் (ஆசையப்பா), ரட்ஷிதன், டினுசிகா, நிரேஷ், கிஷானி, நிர்ஷயா, பிரனீஸ் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2024) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். அவரின் இறுதி ஆத்ம அஞ்சலி சங்குவேலியில் உள்ள அன்னாரின் அம்மம்மா வீட்டில் நடைபெற உள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
021 225 5092

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(CS/54685) J-1


## சங்கிலிகள் திருட்டு

சாவகச்சேரி, ஏப்.10

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் மூன்றாம் பங்குனித் திங்கள் உற்சவத்தில் பக்தர்களின் 3 தங்கச் சங்கிலிகள் திருடப்பட்டுள்ளன. சுமார் மூன்றரைப் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று கூறப் படுகின்றது. (எ-9)

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 03 . 1926



மறைவு 08 . 04 . 2024

### சின்னத்தம்பி தியாகராஜா
(அப்பையா அண்ணா)

யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணம் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தியாகராஜா (அப்பையா அண்ணா) அவர்கள் நேற்றுமுன்தினம் (08.04.2024) திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற ஞானபூரணம் அவர்களின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (11.04.2024) காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
074 058 7792
077 142 7658


133, புகையிரத நிலைய வீதி
கொக்குவில் கிழக்கு.

(CS/54682) J-1

## கண்ணீர் அஞ்சலி

### மகேஸ்வரன் மதீசன்

உரிமையாளர்:- (Mahanathy Tex, Jaffna Electricals Showroom, Sankamam Tex, Abi Pvt Ltd, Malabar Electrical, Colour Pluz)



சரசாலை வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப் பாணம், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியா திருச்சி மாவட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் மதீசன் அவர்கள் இந்தியாவில் இயற்கை எய்தியதைக் கேள்வியுற்று ஆழ்ந்த கவலையடை கின்றோம்.

இன்று நடைபெறும் அன்னாரின் இறுதிக் கிரியையில் துயர் பகிர்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய நல்லூர் முருகனை வேண்டி நிற்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்

தோற்றம் 16.04.1972

மறைவு 06.04.2024

வாணி றெக்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்,
யாழ்ப்பாணம்.

மணிவர்ணன் குடும்பத்தினர்
நல்லூர், கல்வியங்காடு
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும்
நினைவில் கொள்
மனிதனாகப்
பிறந்தவன்
பயனின்றி
அழியக்கூடாது.
கார்ல் மார்க்ஸ்

# புதன் பொய்கை

10.04.2024
புதன்கிழமை



**பிரதீப் தியாகராஜா**
*ஊடகத்துறை*
*யாழ்.பல்கலைக்கழகம்*

# தம்பன் கடவை

## பொலநறுவை பூர்வத்தமிழ் குடிகளின் வரலாற்று தொடக்கம்



இலங்கையில் தற்போது புழக்கத்தில் இருக்கும் ஐம்பது ரூபா நாணயத் தாள்களில் ஒரு பாலத்தினுடைய புகைப்படம் அச்சிடப்பட்டிருக்கும். பெரும்பாலானவர்களுக்கு அது எந்த இடம் என்று சரியாகத் தெரியாமல் இருக்கலாம். பொலநறுவை நகரில் இருந்து ஏ-11 வீதியின் ஊடாக மட்டக்களப்புக்கு செல்லும் வழியில் சரியாக 14 கிலோமீற்றர் தூரத்தில் இந்தப் பாலம் அமையப்பெற்றுள்ளது.

1922ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் உருவாக்கப்பட்ட ரயில் பாலமும், அதனின் அருகிலேயே 2007ஆம் ஆண்டு ஜப்பான் இலங்கை நட்புறவாக கட்டப்பட்ட புதிய போக்குவரத்து பாலத்தையும் காண முடியும். இந்த வழியே செல்பவர்கள் வாகனத்தை சற்று நிறுத்தி ரயில் பாலத்தையும் அதன் கீழாக பிரம்மாண்டமாக பரந்து பாயும் மகாவலி ஆற்றையும் ரசித்துச் செல்வது இயல்பானதுதான். மனம்பிட்டிய என்ற பெயரில் சிங்களவரால் அழைக்கப்படும் இந்த பாலம், அமைந்திருக்கும் பிரதேசமும் அதனைச் சுற்றிக் காணப்படும் வெள்ள சமவெளிகளும் வரலாற்றுக் காலத்தில் இருந்து தமிழர்கள் வேளாண் குடிகளாக வாழ்ந்து வரும் பிரதேசமாகும். ஆறுகள் தான் மானிட நாகரிகத்தின் தோற்றப் புள்ளியாக அமைகின்றது என்ற அடிப்படையில் வரலாற்றுக் காலத்தில் இருந்து விலங்கு வேளாண்மை, மீன்பிடி, விவசாயம், சேனைப் பயிர்ச்செய்கை ஆகிய வாழ்வாதாரங்களை நம்பி தமிழ்க்கூட்டம் குழுக்களாக வாழ்ந்து இன்று விருத்தியடைந்த பிரதானமான இடமாக தம்பன் கடவையினைக் குறிப்பிடமுடியும்.

### பெயரும் பின்புலங்களும்

தம்பன் கடவை என்ற சொல்லுக்கு பிரதேசவாசிகளிடம் பொருள்கேட்டு வினவும்போது, 'ஆங்கிலேயர் பாலம் அமைப்பதுக்கு முற்பட்ட காலத்தில் மகாவலி ஆற்றின் ஒரு கரையிலிருந்து மற்றக் கரைக்கு ஆட்களை தோணி மூலம் தம்பன் என்ற நபர் ஏற்றி இறக்கினார். அதனால் தம்பன் கடவை என்ற பெயர் இந்த இடத்துக்கு அமையப்பெற்றது' என்பது சிலரின் கருத்தாக அமைகின்றது. இலங்கையை ஆட்சி செய்த ஒல்லாந்தரின் குறிப்புகள் மற்றும் ஆங்கிலேயரின் இலங்கை வரைபடத்தில் கூட இந்த இடம் 'தம்பன் கடவை' என்ற சொல்லாடலால் மிகப் பிரதானமான பிரதேசமாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. வரலாற்றுக்காலப் பெயர் தொடர்பான ஆதாரங்களைப் பெறமுடியவில்லை. ஆனாலும் சோழர் காலத்தில் தோணிக்கடவை என்ற பெயரில் அழைக்கப் பட்டிருப்பதற்கான குறிப்புகள் கிடைக்கின்றன.

இருந்தாலும் தம்பன் கடவை என்ற பெயர் தொடர்பில் இடைப்பட்ட வரலாற்றை ஆராயும்போது 1215ஆம் ஆண்டளவில் கலிங்கமாகன் என்ற தென்னிந்தியத் தமிழன் இலங்கையினை ஆக்கிரமித்து 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனது காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பட்டிணம் என்று சொல்லப்பட்ட இன்று தம்பலகாமம் என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் ஏற்பட்ட எதிர்ப்பினை போரிட்டு வென்று அவர்கள் இனிமேலும் வரக்கூடாது என்று விரட்டிச்சென்று வெற்றிபெற்ற இடம் இந்தப் பகுதியாகும். இந்தப் போரினை வழிநடத்திய தளபதியின் பெயர் தம்பன் என்ற படியால் ஒரு காரணப்பெயராக உருவாகி இருப்பதாகவும் நம்பப்படுகின்றது.

### பாலமும் பழமையும்

பாலத்தின் முடிவில் வீதியின் இடது புறமாகக் காணப்படும் ரயில் பாலத்தைக் கடந்து சற்றுத் தூரம் உள்ளே செல்லும்போது மிக ஆச்சரியமான கர்ணப்பரம்பரை கதைகளோடு தொடர்புடைய சித்திர வேலாயுதர் ஆலயத்தைக் காணமுடியும். மகாவலிகங்கை கரையில் அமைந்திருக்கும் மேற்படி ஆலயம் இன்று தமிழ் பல கிராமங்களால் பங்கு முறையில் நிர்வகிக்கப்படுகின்றது. பிரதேச விவசாயக் குடிகள், சோழர்கால படை வீரர்கள் மற்றும் சேவை தொழிலாளர்களோடு தொடர்புடைய



உறுதிப்படுத்தப்படாத பழைமையான வரலாற்றை கொண்டுள்ளது. மீண்டும் நேராக ஏ-11 வீதியில் பயணிக்கும் போது முதலாவது தென்படுவது மனம்பிட்டிய என்று சிங்களவர்களால் சொல்லப்படும் நகரமாகும். மன்னம்பிட்டி என்பது மன்னர் பட்டி மற்றும் மன்னர் திட்டி (மேட்டு நிலம்) ஆகிய சொல்லில் இருந்து வந்திருக்கின்றது என்பது பிரதேசவாசிகளின் கருத்தாக உள்ளது. சோழர் காலத்தில் நிர்வாக கடமைக்காக அழைத்துவரப் பட்ட தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் அந்தப் பிரதேச பூர்வீக தமிழர்களோடு சேர்த்து குடியமர்த்தப்பட்ட தரவுகள் கிடைக்கின்றன.

### மகாவலியின் பின்புலம்

1833 ஆம் ஆண்டு கோல்புறுக் கமரன் யாப்பின்படி இலங்கை 5 மாகாண அலகாகப் பிரிக்கப்பட்டது. இதன்போது மகாவலி ஆற்றுக்கு மறுபக்க பிரதேசம் கிழக்கு மாகாணத்தோடு இணைக்கப்பட்டது 1873 ஆம் ஆண்டு வடமத்திய மாகாணம் உருவாக்கப்பட்டு மீண்டும் உள்வாங்கப்பட்டது. 1900 ஆம் ஆண்டு காலம் [illegible] இருந்துள்ளது. குறிப்பாக 1960 ஆம் ஆண்டு வரை இப்பிரதேச வயற்காணிகள் தமிழர்களின் உரிமையாகவே இருந்துள்ளது. 1965 காலத்தில் கூட மன்னம்பட்டி கிராமசபை தலைவராக கதிர்காமத்தம்பி என்ற தமிழரே பதவி வகித்துள்ளார். அதற்குப் பிறகு திட்டமிட்ட மகாவலி குடியேற்றத்தில் வெளியூர் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் என்ற நோக்கிலும் 1983 ஜூலை கலவரத்திலும் கிழக்கு மாகாணத்துக்கு தமிழர்கள் விரட்டப்பட்டனர்.

மீண்டும் மீள்குடியேறும் போது அவர்களின் பல ஏக்கர் கணக்கான பரம்பரைக் காணி நிலங்கள் சிங்களவர்களுக்கு உரித்துடையதாக இருந்ததுடன் வேறு இடங்களில் தமிழ் மக்கள் பிரித்து குடியேற்றப்பட்டனர். அவர்களுக்கு வெறும் இரண்டரை ஏக்கர் காணி வழங்கப்பட்டன. அதனை எதிர்த்தவர்களுக்கு இன்றுகூட காணியுரிமை இல்லை. மகாவலிக் குடியேற்றத் திட்டத்தின் பின் சாதாரண பிரதேசசபை தலைவரை கூட தெரிவு செய்வது சிம்மசொப்பனமாகிவிட்டது. 1895 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழர் பாடசாலை பிரதேசத்தின் தாய்ப் பாடசாலையாகக் காணப்படுகின்றது. மிகப் பழமையான காளி கோயில் வழிபாட்டு இடங்களையும் இங்கு பார்வையிட முடியும். இன்று இந்தப் பிரதேசம் திம்புலாகலை பிரதேசசபைக்குள் உள்வாங்கப்பட்டு திட்டமிட்டு தமிழர் ஆதிக்கத்தை குறைத்துவிட்டது.

மன்னம்பிட்டிய நகரில் இருந்து மகாவலி ஆறு ஓடும் திசையில் சில கிலோமீற்றர் யானைகள் நிறைந்த காட்டுக்குள் நுழையும்போது இதுவரை ஆய்வு செய்யப்படாத மிகப் பழமையான வரலாற்றுக் கால சுவடுகளை அவதானிக்கமுடியும். இந்த இடம் பொலநறுவை தமிழர்கள் ஆதிக் குடிகளாக வாழ்ந்த இடமாகக் காணப்படுகின்றது. இன்றும் கூட விசேட தினங்களில் தமிழ்மக்கள் பொங்கல் படைத்து வழிபடுகின்றனர். கல்லூர் என்று அழைக்கப்படும் இந்தப் பகுதியில் கற்பாறைகளில் தமிழ்ப் பிராமி எழுத்துகளையும், திரிசூல அடையாளங்களையும் குத்துக்கல், நடுக்கல் அமைப்புகள், 200இற்கும் அதிகமான புராதான ஈமச்சடங்கு முறைமையினை பிரதிபலிக்கும் கற்தூண் அடையாளங்கள் காணப்படுகின்றன. வளமான நிலங்களை நாடியும் மகாவலி கங்கையின் பெருவெள்ளம் காரணமாகவும் இந்தப் பகுதியில் இருந்து தமிழர்கள் வெளியேறி இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

### வெளிப்பட்ட பிராமிகளும் தொன்மைய வழிபாடுகளும்

மன்னம்பிட்டி நகரில் இருந்து பிரதான வீதியின் கிழக்கு புறமாக திம்புலாகலை மலை ஊடாகப் பயணிக்கும் போது இரண்டு பழமையான தமிழ்க் கிராமங்களை காணமுடியும். திம்புலாகலை மலை எனப்படுவது மகாவம்சம் கூறும் தோலாமலை. பண்டுகாபயன் மாமன்மார்களுக்கு பயந்து மகாவலி கரையின் மேற்கே ஒளிந்து வாழ்ந்து ஆட்சி செய்த பிரதேசமாகும். இது தமிழர்களினால் கல்லுமலை என்று அழைக்கப்படுகின்றது ஆரம்ப கால தமிழர்கள் வாழ்ந்த பிரதேசமாகும் வயது முதிர்ந்த பிரதேசவாசி ஒருவரிடம் வினவும்போது இயக்குர என்ற வேடுவ இன மக்கள் இந்த பகுதியில் சுற்றி தெரிந்து தேன் எடுத்துச் செல்வார்களாம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகிக்கும் தண்ணீர்!



கொ.பிலிஸ்ரன்ராஜ்
ஊடகக் கற்கைகள் துறை.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

நீரின்றி அமையாது உலகு' என்றிருக்கின்றார் வள்ளுவர். பொய்யாமொழிப் புலவரான வள்ளுவரின் வாக்கு எக்காலத்திலும் பொய்த்ததாக வரலாறில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குறிப்பாக புங்குடுதீவில் நிலவும் தண்ணீர் பிரச்சினை 'நீரின்றி அமையாது உலகு' என்ற வள்ளுவனின் வாக்குக்கு இலக்கணமாகவே அமைந்திருக்கின்றது என்றால் அது மிகையில்லை.

புங்குடுதீவில் சுத்தமான குடிதண்ணீர் பெறுவதென்பது தற்போது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இன்று நேற்றல்ல பல தசாப்தங்களாக இந்தப் பிரச்சினை அங்கு நிலவுகின்ற போதிலும் இன்னமும் இந்தப் பிரச்சினைக்குக் காத்திரமான தீர்வொன்று வழங்கப்படவில்லை என்பதே உண்மை. அடிப்படைக் கட்டுமானங்கள் இல்லாத நிலையில் புங்குடுதீவு இருந்தாலும் குடிதண்ணீர் பிரச்சினைதான் போர்க்கால அடிப்படையில் தீர்வைத் தேடவேண்டிய பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

மக்கள் குடிப்பதற்குரிய சுத்தமான நீருக்கு அன்றாடம் அலைந்து திரிய வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கண்ணகிபுரம் கண்ணகி அம்மன் ஆலயம், கந்தசுவாமி ஆலயம், கலட்டிப் பிள்ளையார் ஆலயம் என்பவற்றில் உள்ள குடிதண்ணீர் கிணறுகளிலும், சங்கத்தாங்கேணி குடிதண்ணீர் கிணற்றிலும், கேரதீவு குடிதண்ணீர் கிணற்றின் ஊடாகவும் மக்கள் தங்களின் குடிதண்ணீர்த் தேவையை பெரும் சிரமங்களுக்கு மத்தியில் நிவர்த்திசெய்கின்றபோதிலும், கோடை காலத்தில் படும்பாடு பெரும்பாடாகவே காணப்படுகின்றது.



கோடை காலத்தில் சாட்டியில் இருந்து புங்குடுதீவுக் கிராமத்துக்கு பவுசர்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. குடிதண்ணீர் விநியோகத்தை புங்குடுதீவு பிரதேச சபை மற்றும் புங்குடுதீவு வட இலங்கை சர்வோதயம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து மேற்கொள்கின்றன. பணத்தைச் செலுத்தியே பவுசர் தண்ணீரைப் பெறவேண்டியுள்ளதால், வசதி படைத்தவர்கள் அவற்றை இலகுவாகக் கொள்வனவு செய்ய, வசதி இல்லாதவர்கள் பெரும் பொருளாதார இடர்பாட்டுக்குள் தினம்தினம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

புங்குடுதீவின் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக குழாய் மூலமான தண்ணீர் விநியோகத்துக்கு 2001ஆம் ஆண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தில் பெரியதொரு குடிதண்ணீர்த் தாங்கியொன்றும் நிறுவப்பட்டுள்ளது. எனினும் இந்தத் திட்டம் இன்னமும் பயன்பாட்டுக்கு வராதமை துரதிஷ்டமே.

புங்குடுதீவில் நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறை தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் இன்னமும் அதிகாரிகளாலும் அரசியல் பிரதிநிதிகளாலும் அந்த மக்களின் தாகத்துக்கு தண்ணீர் வழங்கப்படாமை பெரும் அபத்தமே.

பாலைவன தேசமான இஸ்ரேல் இன்று குடிதண்ணீரில் தன்னிறைவு அடைந்துள்ளது என்றால் அதற்கு அந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மழைநீர் சேமிப்புத் திட்டங்களும், குடிதண்ணீர் பாதுகாப்புக் கட்டுமானங்களும்தான் பிரதான காரணம். இஸ்ரேலையொத்த தட்பவெப்ப காலநிலையைக் கொண்ட யாழ்ப்பாணத்திலும் அவ்வாறான செயற்றிட்டங்கள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே தீவக மக்களின் பெருவிருப்பம்.

# தம்பன் கடவை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் பெயர் கூட கந்தன், வள்ளி என்று அழைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தமிழை கொச்சையாகப் பேசுவார்கள். எங்கள் வீட்டு விசேடங்களுக்கு கூட அவர்களை அழைப்போம். சாப்பிட்டுவிட்டு செல்வார்கள் ரணசிங்க பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் பௌத்த விகாரை மலையில் அமைக்கப்பட்டது என்றார். அண்மையில் கூட தமிழ் ஆய்வாளர்களினால் திம்புலாகல மலையில் தமிழ் பிராமி சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

திம்புலாகல மலையை அண்மித்து நாகர்பொக்கணை என்ற தமிழ்க் கிராமம் காணப்படுகின்றது. இந்தக் கிராமம் நாவல் பொக்குணை என்று அழைக்கப்பட்டு தற்போது நாமல் பொக்குணைய என்று அரச தரவுகளில் அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த ஊரிலும் தனித்தமிழ் மக்கள் விவசாயக் குடிகளாக வாழ்ந்து வருகின்றனர். இந்த ஊரினை கடந்து சற்று உள்ளே செல்லும்போது சொருவில் என்ற பழமையான தமிழ்க் கிராமத்தைக் காணமுடியும். தமிழர்கள் முழுக்க செறிந்து வாழும் இந்தக் கிராமத்தில் மிகப் பழமையான விநாயகர் வழிபாட்டு இடத்தினைப் பார்வையிடமுடியும். குறிப்பாக பொலநறுவை பகுதியில் வாழும் மக்களின் பிரதானமான வழிபாட்டு மூலமாக விநாயகர் வழிபாடு காணப்படும். காரணம் யானைகள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுவதால் விவசாய நிலங்களை பாதுகாக்க மக்கள் வாழ்வியலோடு ஒன்றிய வழிபாடாகக் காணப்படுகின்றது. சொருவில் கிராமத்தில் பழமையான கண்ணகி அம்மன் வழிபாடு முறைமைகளும், கொம்பு முறி விளையாட்டு பாரம்பரியமும் காணப்படுகின்றது.

## அதிகரிக்கப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றம்

தொடர்ந்து ஏ-11 வீதியில் நேராகப் பயணிக்கும்போது பாதையின் இருமருங்கிலும் மகாவலித் திட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்கள கொத்தணிக் குடியிருப்புகளை காணமுடியும். சரியாக 4 கிலோ மீற்றர் தூரம் கடந்து வரும் போது வெலிகந்த பிரதேசசபைக்கு உட்பட்ட செவனபிட்டிய என்ற நகரத்தினை பார்வையிட முடியும். மகாவலித் திட்டத்தில் உருவாக்கப்பட்ட இந்த நகரத்தினை மையப்படுத்தி உனாவெள, கறப்பளை, முத்துக்கல், தீவிச்சேனை, குடாப்பாக்கனை ஆகிய பிரதான தனித்தமிழ் கிராமங்களை காணமுடியும். இதில் செவனப்பிட்டிய என்று அழைக்கப்படும் சிங்களப் பெயரானது 'வள்ளிந்த சமன்பிட்டி' என்று அழைக்கப்பட்ட இடமாகும். சவன்புல் என்று பாய் இழைக்கப் பயன்படும் புல் அதிகமாக இருந்தமையால் அந்த இடம் முன்னர் சமன்பிட்டி என்ற பெயர் வழங்கப்பட்டு இருந்தது.

இந்த நகரில் இருந்து இடது புறமாக சற்று உள்ளே பயணிக்கும் போது உனாவெள என்ற தமிழ்க் கிராமம் தென்படும். இன்று இரண்டரை ஏக்கர் வயல் நிலமும் அரை ஏக்கர் வீட்டு நிலமும் மகாவலித் திட்டத்தில் பெற்று வாழும் இந்த கிராமத்தில் நூற்றுக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் கல்லூறை அடுத்து காணப்படும் மலையினை சுற்றி பத்திற்கும் குறைவாக குடில்களுடன் காட்டுப் பகுதியில் சேனை விவசாயம் செய்து வாழ்ந்து வந்த குடும்பங்களின் பெருக்கமாக இந்த ஊர் காணப்படுகின்றது.

உனாவெள கிராமத்தின் அடுத்த எல்லை கரையில் கறப்பளை கிராமம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தில் செல்வாக்கான கிராமமாக இதனை அடையாளப்படுத்தமுடியும். மகாவலித் திட்டத்தில் சமன்பிட்டி ஊரில் உள்ள மக்களையும் கறப்பளை என்ற ஊரில் இருந்த மக்களையும் ஒன்று சேர்த்து புதிய இடத்தில் கறப்பளை கிராமம் என்ற பெயரில் குடியேற்றம் செய்துள்ளனர். இன்றும் கூட பழைய கறப்பளை, சமன்பிட்டி என்று மக்கள் அந்த இடங்களில் வழிபாடுகளை செய்து வருகின்றனர். 350இற்கும் அதிகமான குடும்பங்களும், அவர்கள் சார்ந்த விவசாயம், வேட்டை, தனித்துவமான புகையில் கருவாடு வாட்டும் முறைமை, வில்லு நிலங்களில் மீன்பிடி போன்றவை சிறப்பாகக் காணப்படுகின்றன.

கறப்பளை கிராமத்தில் இருந்து வலது புறமாக நடந்து செல்லும் தூரத்தில் உள்ளது முத்துக்கல் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்துக்கென தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியம் உள்ளது. வரலாற்றில் மட்டக்களப்புக்கான சில தொடர்புகளும் ஆட்சி மரபுகளும் குடியேற்றங்களும் காணப்படுகின்றது. பல ஏக்கர் கணக்கான நிலங்களில் மக்கள் விவசாயம் செய்து வந்ததுடன் இன்று வன ஜீவராசிகள் திணைக்களமானது பல ஏக்கர் கணக்கான காணிகளை அபகரித்து அரசுடைமையாக்கியுள்ளது. மிகப் பழமையான கண்ணகி அம்மன் வழிபாட்டு முறைமைகளையும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தோடு நெருங்கிய தொடர்புடைய விடயங்களையும் இந்த ஊரில் அவதானிக்கமுடியும். முத்துக்கல் கிராமத்தின் அடுத்த கரையில் எல்லை கிராமமாக இருப்பது தீவிச்சேனை ஆகும்.

## ஆவணப்படுத்தல் அவசியம்

தம்பன்கடவை பிராந்தியத்தில் யுத்த காலத்தில் பல குடும்பங்கள் காவுகொள்ளப்பட்டதுடன் பலர் காணாமல் போய் உள்ளனர். கிழக்குப் போராளிகளின் பிரிவுக்குப் பின்னர் அவர்களினால் மிகக் கொடூரமான துயரத்தையும் அனுபவித்துள்ளனர். இதில் ஊர்க்காவல் படைகளின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளும் விதிவிலக்கல்ல. பெயர் சொல்லும் படியான மாவீரர்களின் வரலாறும் இந்த கிராமங்களினுள் புதைந்துள்ளது.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் தொல்லியல் திணைக்களம் காணிகளை அபகரிப்பது போன்று பொலநறுவை தமிழர்களின் காணியை அபகரிக்கும் அரச நிறுவனமாக வன ஜீவராசிகள் திணைக்களம் இருக்கின்றது. தமிழர் வரலாற்றுத் தடங்கள் சட்டவிரோதமான புதையல் தோண்டுபவர்களினாலும் இல்லாது ஆக்கப்பட்டு வருகின்றது. புதிய பௌத்த விகாரைகளும் பூர்வீக நிலத்தை ஆக்கிரமிப்பது மட்டுமின்றி யானைக்கான மின்சாரவேலி என்ற போர்வையில் பல காணிகள் முடக்கப்பட்டுள்ளன. எனவே வடக்கு - கிழக்கு தமிழர்களைப் போல இவர்களின் வரலாற்றை சரியாக ஆவணப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது. முறையான ஆய்வுகளும் சரியான ஆவணப்படுத்தலும் நடக்கும் பட்சத்தில் ஈழத்தமிழர் வரலாற்றில் தம்பன் கடவை தனித்த இடத்தினைப் பிடிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியால் சிதைக்கப்படுகிறதா இந்தியாவின் ஜனநாயகம்?



சாம் ரமேஸ்குமார்

ஓர் இனம், ஒரு மதம், ஒரு மொழி என்ற கொள்கையில் தன்னை சர்வதேசத்தின் முன் நிலை நிறுத்த முற்படும் ஒரு தேசம். தன் தரைத் தோற்றத்தில் இருந்து பல துண்டுகளாக உடையும் அபாய நிலைக்குச் சென்று விடும் என்பதே உலக அரசியல் வரலாறாக இதுவரை இருந்து வந்துள்ளது.

பல மொழிகளையும் பல இனங்களையும் பல மதங்களையும் தன்னகத்தே கொண்டது மட்டுமல்லாமல் உலக நாடுகளுக்கே எதிர்காலத்தில் ஒரு வழிகாட்டியாக இருக்கும் என பல ஞானிகளால் புகழப்பட்ட இந்திய தேசம், இன்று பல சிறுபான்மை இனங்களை மத ரீதியாக மற்றும் மொழி ரீதியாக ஒடுக்குவதில் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு முனைப்பு காட்டுவது இந்திய தேசிய ஒற்றுமையில் பெரும் பின்னடைவைச் சந்திக்கும் என அரசியல் விமர்சகர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எக்காலத்திலும் மதரீதியாக தன்னை ஓர் இந்து நாடு என இந்தியா நிலைநிறுத்த முற்படுமேயானால் இந்திய மத நல்லிணக்கமானது கேள்விக்கு உட்படுத்தப்படும் என்பதே இந்தியாவுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த மகாத்மா காந்தியின் தீர்க்கதரிசனமான வார்த்தையாகும். ஆனால் மதவெறியைத் தூண்டியாவது இந்த ஆண்டில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எப்படியாவது ஆட்சிக் கட்டிலைப் பிடித்து விடுவோம் என மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசும் அதன் பரிவாரங்களும் கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பதானது மத வெறியர்களின் தீவிரத்துக்கு தீனி போடுவதாகவே அமைந்திருக்கின்றது.

### வல்லரசு நிலையை அடையுமா இந்தியா?

மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள் மட்டுமல்லாமல் அண்டை நாடு சீனாவுடனான எல்லைப் பிரச்சினை போன்றவற்றையும் தீர்க்க முடியாமல் தீண்டாடும் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு இந்துத்துவா என்ற மத வெறிக் குரலோடு மறுபடியும் ஐந்து வருடங்களுக்கு ஆட்சியதிகாரத்துக்கான ஆணையை மக்களிடம் எதிர்ப் பார்த்துக் கார்த்திருப்பது மிகவும் அபத்தமானது.

என்னதான் டிஜிட்டல் இந்தியா என சர்வதேசத்தின் முன் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மார்தட்டிக் கொண்டாலும் மக்களின் அடிப்படைத் தேவையான மின்சாரம், கழிப்பறைகள் இல்லாத குக்கிராமங்களை இன்றும் இந்தியாவில் காணக் கூடியதாக இருப்பது மோடியினுடைய ஆட்சியின் இயலாமையைத் தொட்டுக் காட்டுகின்றது.

வெறும் வார்த்தைப் பிரயோகங்களாலும் அரச ஊடகங்களின் பக்கச் சார்பான அனுசரணையாலும் மோடி தலைமையில் இந்தியா ஒருபோதும் வல்லரசாகிவிட முடியாது.

முதலில் மதங்களுக்கு இடையிலான, மொழிகளுக்கு இடையிலான, மாநிலங்களுக்கு இடையிலான மனிதப் புரிதல்களை சீர்செய்து உள்வீட்டுப் பிரச்சினைகளை தீர்ப்பதன் மூலமே இந்தியா வல்லரசு என்ற இலக்கை எதிர்காலத்தில் எட்ட முடியும்.

மோடி என்ற தனிப்பட்ட விம்பத்தையும் இந்துத்துவா என்ற கொள்கையையும் மட்டும் நம்பிக் கொண்டு இந்தியாவின் எழுபது வீதமான வறுமையை ஒருபோதும் அகற்றி விட முடியாது. மோடியின் மதவாதக் கொள்கைகள் அல்லது சிந்தனைகள் தென் மாநிலங்களில் ஒருபோதும் எடுபடப் போவதில்லை என்பதும் அத்தோடு தாமரை அங்கு மலரப் போவதில்லை என்பதும் யதார்த்த பூர்வமான உண்மையாகும்.

அதிலும் தனித்துவமான தமிழ் நாட்டில் தற்போதைய சமகாலத்தில் தமிழ்தேசியம் என்றுமில்லாதவாறு விஸ்வரூபம் எடுத்து வலுப்பெற்று வருவது மத்தியில் மோடி தலைமையிலான பா.ஜ.க. வுக்கு மட்டுமல்ல தி.மு.க. , அ.தி.மு.க.வுக்கும் பெரும் தலைவலியாகவே இருந்து வருகின்றது. அப்படி இருக்கும்போது பா.ஜ.க.வினுடைய மாநிலத் தலைவர் அண்ணாமலை தலைமையில் எப்படி மோடியால் தமிழ் நாட்டில் வெல்லமுடியும்.

### மோடி சாதித்ததென்ன?

மோடி தலைமையிலான பத்தாண்டு கால ஆட்சி அம்பானிகளைத்தான் உருவாக்கியிருக்கின்றதே தவிர வறுமையை அல்லது ஊழலை ஒழிப்பதற்கு எந்த பொறிமுறைகளையும் இதுவரை உருவாக்கவில்லை என்பதே உண்மை. அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதால் வறுமை ஒருபோதும் அகலப்போவதில்லை.

மத்தியில் ஆட்சிக்கு வரும் எந்த அரசானாலும் மதத்தின் பெயராலும் மற்றும் மொழியின் பெயராலும் இந்திய ஆட்சியதிகாரத்தைக் ஒருபோதும் கட்டமைக்காமல் அடிதட்டு மக்களின் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களைப் பூரணப்படுத்தி மாநிலங்களுக்கு இடையிலான நல்லுறவுகளை வலுப்படுத்தி சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிப்பதன் மூலமே இந்தியா தன் ஜனநாயகத்தை சர்வதேசத்தின் முன் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

டிஜிட்டல் இந்தியா என அரசியல் மேடைகளில் கூக்குரல் போடுவதாலும் இந்துத்துவா கொள்கை மூலம் இந்து ஆலயங்களை கட்டி எழுப்புவதாலும் இந்திய மக்களின் அடிப்படைத் தேவைகளையும் வறுமையையும் ஒருபோதும் ஒழித்து விட முடியாது. இதை பா.ஜ.க. தலைமையிலான மோடி அரசும் அதன் கூட்டணிகளும் புரிந்துகொண்டால் இந்தியா 2050ல் பூகோள வல்லரசாவதைத் தடுக்க இயற்கைக்கும் துணிவிருக்காது.

# தொழுநோய் மாற்றத்தின் தொடக்கமாவோம்



வைத்தியர் எஸ்.குமுதினி
ஆயுள்வேத வைத்திய அதிகாரி
வடமராட்சி தெற்கு, மேற்கு

தொழுநோய் என்பது இலங்கையில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் ஒரு நோய்நிலையாகும். தக்க சமயத்தில் சிகிச்சை எடுக்கத் தவறியதால் ஏற்படுகின்ற ஊனம், உடல் உறுப்புக்களின் பாதிப்புக்களைக் கண்டு மனதில் ஏற்படுகின்ற அருவருப்பு, பயம், தொழுநோயாளர்களைப் புறக்கணிக்கும் போக்கு இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டுமாயின் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு எமக்கு அவசியமானதும் காலத்தேவையானதுமாகும்.

தொழுநோய் என்பது தொற்றுநோய் என்ற போதிலும், இது முற்றுமுழுதாகக் குணப்படுத்தக்கூடிய நோய் நிலையாகவே காணப்படுகின்றது. சுவாசத்தின் மூலம் மூக்கு, வாய் வழியாகச் சுவாச மண்டலத்தினுள் புகுந்து நரம்புகள் மற்றும் தோலை அடைகிறது. இந்த நோயானது மைக்கோ லெப்றே எனும் பக்றீரியாவால் ஏற்படுகிறது. இந்த பக்றீரியா நாசிவழியாக உட்சென்று நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களை தாக்கி மிக மெதுவாக பெருகுவதால் நோய்த்தொற்று ஏற்பட்டு குறைந்தது 5 அல்லது 6 வருடங்களுக்குப் பின்பே நோயின் அறிகுறிகள் தோன்றுகின்றன. உலகளாவிய ரீதியில் ஒரு இலட்சத்து 74 ஆயிரத்து 59 பேர் தற்போது புதிய தொழுநோயாளிகளாக அவதானிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 66 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பெண்களே. இலங்கையில் 1995ஆம் ஆண்டு தொழுநோய் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பினும், அண்மைக்காலமாக வருடாந்தம் சராசரியாக 2 ஆயிரம் தொழுநோயாளிகள் அவதானிக்கப்படுவது துரதிஷ்டவசமானதே. இவர்களில் 10 வீதமானவர்கள் சிறுவர்கள். அத்துடன், தொழுநோய் காரணமாக உலகளவில் 2 தொடக்கம் 3 மில்லியன் மக்கள் நிரந்தரமான அங்கவீனர்களாகியுள்ளனர்.

### தொழுநொய் பற்றிய சமூகத்தின் நோக்கு

தொழுநோய் என்பது ஆகப்பெரும் பிற்போக்குத்தனமான சிந்தனையின் பாற்பட்டதாகவே முன்னர் அமைந்திருந்தது. 'பாவங்கள் செய்தவர்களுக்கே தொழுநோய் ஏற்படும்' என்ற சிந்தனைகூட எம் சமூகத்தில் முன்னொரு காலத்தில் இருந்திருக்கின்றது. ஆனால், இன்று தொழுநோய் தொடர்பான புரிதலை எம் மக்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர் என்று சொன்னால் அது உண்மையே. பலநூறு பேர் தொழுநோயின் பின்னரான சிகிச்சைகளையடுத்து இன்று சமூகத்துடனும் குடும்பங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளனர். இது இந்நோய் பற்றிய சமூகத்தினரின் பார்வை நேர்மறையாக மாறியுள்ளது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

### தொழுநோயின் அறிகுறிகள்

வெளிறிய தோல் திட்டுக்கள், கை மற்றும் கால்களில் உணர்விண்மை, முகம் மற்றும் காது மடலில் வீக்கம் ஏற்படுதல், தசை பலவீனமடைதல், பக்கவாதம் ஏற்படுதல் என்பன தொழுநோயின் அறிகுறிகளாகக் காணப்படுகின்றன. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த அறிகுறிகளை அவதானித்து விரைவான சிகிச்சைகளுக்கு தம்மை உட்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கையை மீண்டும் அடைந்து கொள்ள முடியும். ஆனால், சிகிச்சைகளில் அசமந்தமாக இருக்கும் பட்சத்தில், கை, கால் விரல்கள் மடங்கிப்போதல், மணிக்கட்டு, பாதம் துவண்டு போதல், பாதத்தில் புண்கள் உண்டாதல், உணர்விழத்தல் போன்ற அங்கவீனக் குறைபாடுகளை எதிர்கொள்ள வேண்டிவரலாம். இந்தத் தாக்கங்களின் தீவிரத்தன்மையைப் பொறுத்து உயிரிழப்புக்களும் ஏற்படும்.

### கடமையும் பொறுப்பும்

தொழுநோயாளர் ஒருவர் சில விடயங்களைத் தன் கடமையாகக் கொண்டிருக்க வேண்டும். உடலில் எந்தவொரு நிரந்தரக் குறைபாடும் ஏற்படாமலிருக்க சிகிச்சையை முழுமையாகப் பெறவேண்டும். தன்னம்பிக்கையுடன் வாழ்ந்து சமூகத்தில் முன்னுதாரணமாக செயற்பட வேண்டும். அறியாமை, தாழ்வு மனப்பாங்கை விடுத்து சிறந்த வாழ்வை முன்னேடுக்க வேண்டும். அத்துடன், தொழுநோயாளர்கள் விடயத்தில் சமூகம் சில பொறுப்புக்களையும் கொண்டிருக்கின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை. 'உதவும் கரங்கள் பிரார்த்திக்கும் உதடுகளை விடச் சிறந்தவை' என்பார்கள். எனவே நாம் தொழுநோய் என சந்தேகம் உள்ளவர் தொடர்பாக உடனடியாக அந்தப் பகுதி பொதுசுகாதார உத்தியோகத்தருக்கு அறியத்தரவேண்டும். அவ்வாறு இனங்காணப்பட்ட நோயாளரை ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரச மருத்துவ மனைகளுக்கு அழைத்துச்சென்று சிகிச்சை பெற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களை அன்பாகவும், மரியாதையாகவும் நடத்தவேண்டும். இவற்றை ஒரு சமூகம் சிறந்த முறையில் ஆற்றும்போது, அது தொழுநோயாளர்களின் வாழ்வில் ஒளியேற்றும் கைங்கரியமாக அமையும் என்பதுடன், இவை போற்றுதற்குரிய செயல்களுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுமாதா வருகைக்காக வீதி விரைந்து புனரமைப்பு

## சரவணபவன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 10

மடுமாதாவின் வருகையை முன்னிட்டு சில்லாலை கதிரைமாதா ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவனின் முயற்சிக்கு அமைவாக நேற்று புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. சில்லாலை கதிரைமாதா ஆலயம் நோக்கியும் மடுமாதா வருகை தரவுள்ள நிலையில் குறித்த வீதியைத் தற்காலிக புனரமைப்புச் செய்து தருமாறு ஆலயத்தினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதற்கு அமைவாக உரிய தரப்பினருடன் பேசி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் குறித்த வீதி புனரமைப்புச் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-125)

*சஜித்-அநுர*

## நேரடி விவாதத்துக்கு இணைப்பாளர் நியமனம்

கொழும்பு, ஏப். 10

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ வுக்கும் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமாரவுக்குமிடையிலான நேரடி விவாதத்துக்கு இணைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவைஐக்கியமக்கள்சக்திநியமித்துள்ளது. இந்த விவாதம் இலங்கையிலுள்ள அரச தனியார் தொலைக்காட்சிகள் யாவற்றிலும் நேரடியாக ஒளிபரப்பப்படவுள்ளது. (அ-ஓ-6)

*முள்ளியவளையில்*

## நேற்றிரவு விபத்து இளைஞன் சாவு

முல்லை., ஏப். 10

முள்ளியவளை, மாமூலையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், முள்ளியவளை, பூதன்வயலைச் சேர்ந்த திருலோகச்சந்திரன் கேதீஸ்வரன் (வயது - 18) என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மாமூலை விஸ்ணுகோவில் வீதியில் வேகமாக நேர் எதிரே வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. 17 வயதுடைய மற்றைய இளைஞன் மாஞ்சோலை மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். (ஓ-19)


## வேலையாள் தேவை

வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்தில் பிரேதம் எரிப்பதற்கான வேலையாட்கள் தேவை. இதற்கு விருப்பமுடையவர்கள் மயான அபிவிருத்திச் சங்கத்தினருடன் தொடர்புகொள்ளவும்.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| 077 438 6508 | 077 151 0464 | 077 271 9829 |

(CR/42185) J-1

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

* யாழ். நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்.
* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி. சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக் கழிவில் வழங்கப்படும்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

**இல. 158, 193**
**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 165 1729, 07777 305 67, 021 222 8334**

(CR/42185A-1)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சிவஞானம்மா தாமோதரம்பிள்ளை



கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் முன்னாள் தர்மகர்த்தாவும் ஆலய வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவருமான சிவகுரு தாமோதரம்பிள்ளை அவர்களின் மனைவியும் ஆலயத் திருப் பணிகளுக்குப் பெரும் நிதிப் பங்களிப்புச் செய்து வருபவருமான திரு தா சஞ்சீவராஜ் அவர்களின் தாயாருமான திருமதி சிவஞானம்மா தாமோதரம்பிள்ளை அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திப்போம்.

**அடியவர்கள்**
**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.**

(CS/1167) V-1

## மரண அறிவித்தல்



## பவானி விஸ்வலிங்கம்

காரைநகர் மணற்பிட்டியை பிறப்பிடமாகவும் செம்பாடு தங்கோடை, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பவானி விஸ்வலிங்கம் அவர்கள் 08.04.2024 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு - தவமணி தம்பதியரின் மூத்தமகளும் களபூமி சத்திரந்தையை சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம்- செல்லம்மா தம்பதியரின் மருமகளும் நித்தியரூபி, மதனரூபிராசன், கமலரூபிராசன், சிவாஜினி, சந்திராதேவி, காலஞ்சென்ற சோதிலிங்கம், இந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரபாகரன் (UK), கருணாகரன் (கிளிநொச்சி வர்த்தகர்), குமுதினி (UK), நந்தகுமார் (UK), சிவகுமார் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் கீதபாலா, தேவநாயகி, சாந்தகுமார், நிசாந்தினி, டெனுசியா ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜிதா, பிரியா, பிரகீதன், ஹரணியா, டினுசன், மாதேஸ், ஆகாஷ், அபிநயா, நதீஸ், கரீஸ்னு, இலக்கியா, டனுஜன், டனுசா, டெனுசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் 11.04.2024 வியாழக்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**72/9 பனிக்கர் லேன்,**
**பலாலி வீதி, திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0778249234**

## St. John's College, Jaffna Old Boys' Association

### OBA DAY AND THE ANNUAL GENERAL MEETING

OBA Day and the 106th Annual General Meeting of the Old Boys' Association of St. John's College, Jaffna will be held on Saturday 27th April, 2024 at St. John's College.

### PROGRAMME FOR THE DAY

07.30 am – Service at the St. John the Baptist Church
08.30 am – Breakfast
10.00 am – Annual General Meeting

### AGENDA

01. Prayer
02. Condolences
03. President's Address
04. Minutes of Last AGM
05. Annual Report
06. Principal's Review
07. Statement of Accounts
08. Resolutions (if any)
09. Amendment to the Constitution (if any)
10. Election of Executive Committee

- 11.30 am – Cricket Match (Old Boys vs Present Boys)
- 12.30 pm – Fellowship Lunch
- 02.00 pm – Cricket Match (Continues)
- 04.00 pm – Principal's Tea
- 04.30 pm – Soccer Match (Old Boys vs Present Boys)

**Kindly accept this as official invitation.**

Members who wish to submit resolutions are kindly requested to do so in writing on or before 17th April 2024 by e-mail to 'sjcobajaffna@gmail.com'.


Electronic version of the constitution and the proposed amendments could be obtained from the secretary on request.

Tickets for breakfast and lunch could be obtained from Mr. P.Rubenthiran - **0773013654**

| Sgd. | Sgd. |
|---|---|
| ***Revd. J.D.Philip,*** | ***Mr. V.S.B.Thuseetharan,*** |
| **Secretary** | **Principal,** |
| **St. John's College, Jaffna** | **St. John's College,** |
| **Old Boys' Association** | **Jaffna** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
05 • 03 • 1942

**மறைவு**
09 • 04 • 2024

# பரராஜசிங்கம் ஸ்ரீபாலச்சந்திரன்

**(ஓய்வுபெற்ற இலிகிதர் - யாழ். ப.நோ.கூ.ச.சங்கம்)**

புங்குடுதீவு இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், ஓட்டுமடம், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் பரராஜசிங்கம் ஸ்ரீபாலச்சந்திரன் நேற்று (09.04.2024) செவ்வாய்க்கிழமை இறை நிலை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் - விசாலாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான குருசாமி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கனகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபாலகிருஷ்ணன், ஸ்ரீபாலசண்முகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தாட்சாயணி (ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி), தாரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசநாதன் (ரமணா), இதயரூபன் (ரூபன்) ஆகியோரின் அன்பு மிகு மாமனாரும், பிரகஸ்னி, சுபிக்சன், திரிஸ்மிகா ஆகியோரின் ஆருயிர் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 886, பருத்தித்துறை வீதி நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**ரமணன் - 077 078 4476**
**ரூபன் - 077 668 2049**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(Cs/54678) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் சோதனையில் 8 பேர் மீது வழக்கு!

வவுனியா, ஏப். 10

வவுனியாவில் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீரென மேற்கொண்ட சோதனை நடவடிக்கையை அடுத்து, 8 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வைரவப்புளியங்குளம், குருமன்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள், வெதுப்பகங்கள் மற்றும் உணவகங்களிலேயே திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பழுதடைந்த பொருள்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, விலைகள் பொறிக்கப்படாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. நீதிமன்றில் முன்னிலையாகாத ஒருவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ப-18)

# செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

சாவகச்சேரி, ஏப்.10

யாழ்.கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு, அதிபர் த.நிமலன் தலைமையில் இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. கமலராஜன், சிறப்பு விருந்தினர்களாக குறித்த வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் இ.இரவீந்திரன், பொலநறுவை புலத்தி சிபுர தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சி.மங்களகல்யாணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-159)

கிளிநொச்சி, ஏப். 10

கிளிநொச்சி, பள்ளிக்குடா வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு, பாடசாலை மைதானத்தில் அதிபர் இ.சுப்ரமணியம் தலைமையில் நாளை வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.கணேஷ்வர நாதன், சிறப்பு விருந்தினர்களாக பூநகரி பள்ளிக்குடா தேவாலய அருட்தந்தை டிலான் யூலியன் மற்றும் பள்ளிக்குடா வித்தியாலய முன்னாள் அதிபர் தி.சிவநாதன், கௌரவ விருந்தினராக பழைய மாணவரும் பொன்னாவெளி பூநகரிபிரதேசசபையின் அபிவிருத்தி உத்தியோகத்தருமான ப.விஜியங்கன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-159)


## வேலையாட்கள் தேவை (பெண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு நன்கு முன் அனுபவமுள்ள சிற்றுண்டிகள் ( பற்றிஸ் / றோல் ) தயாரிப்பதற்கு **பெண் வேலையாட்கள் தேவை.** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(CS/54654) J-1

தொடர்பு:- **076 363 1895**

## வாடிக்கையாளர் கவனத்திற்கு

கிளிநொச்சி A9 வீதி கந்தசாமி கோவில் அருகில் அமைந்துள்ள சாளினி ஓட்டோ கூல் நிறுத்தப்பட உள்ளதால் எம்மிடம் திருத்த வேலைக்குத் தரப்பட்ட **குளிர்சாதனப்பெட்டி, மின்சாரப்பொருட்களை** இம்மாத இறுதிக்குள் மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


தகவல் : உரிமையாளர்.
077 958 3343

(CS/28255) J-1


## பத்தொன்பதாம் ஆண்டு நினைவுத்துளிகள்

**"பொன்னோடு பொருள் சேர்த்து பெருவாழ்வு தந்தாலும் அப்பாவின் நிழலின் கீழ் வாழ்கின்ற வரம் வருமோ!!!"**
**என்ற கூற்றிற்கு இலக்கணமான எங்கள் குடும்ப ஒளிவிளக்கின் 19ம் ஆண்டு நினைவு அலைகள்**

அன்னை மகிழ 02 . 06 . 1953



அன்னை தவிக்க 10 . 04 . 2005

### அமரர்
### சங்கரப்பிள்ளை வரதராசா
**(வள்ளல் வரதன்)**
**நகரசபை - சாவகச்சேரி**
**திதி - பூர்வபக்க துதியை**

அப்பாவே நீங்கள் எம்மைப் பிரிந்து
பத்தொன்பது ஆண்டுகள் காலமானதுவோ!
அருள் விளக்கே நீங்கள் அணைந்தது
சில நாழிகை போலன்றோ!
சிந்ததனையில் தோன்றுதப்பா.

உங்களைத் தொழுதேந்த
எம்முன்னே நீங்கள் இல்லையப்பா
உம்மைப் போல் ஓர் தெய்வம்
இப் புவியில் இல்லையப்பா
மனக் கண்ணில் நாளும்
உமைக் கண்டு துதிப்போமப்பா
மண்ணில் எம் உயிர் வாழும் காலம் வரை!

எம் அருமை அப்பா!
எங்களை எல்லாம் அன்பாலும் பண்பாலும்
அரவணைத்து வழிநடத்திய அந்த நாள்
எங்களை விட்டு நீண்ட தூரம் சென்றாலும்
உம் அறிவுரைகள் அரவணைப்புகள்
என்றும் எங்கள் நெஞ்சில் உயிர் வாழும்
அப்பா என்ற சொல்லுக்கு நீங்களே இலக்கணம்!

உங்கள் உதிரத்தால் எமக்குள்
உமை சுமக்கின்றோம்
உடலைப் பிரிந்தோமே
தவிர உமையல்ல!

என்ன செய்வது எம் மனம் ஏங்குகிறது!
அழுத விழிகளுக்கு ஆறுதல் காட்ட
ஒரு முறையாவது வாங்க
அப்பா உங்கள் முகம் காண..


உங்கள் ஆத்மா அமைதி பெற
கண்ணீர் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

**சந்நிதி இல்லம்**
**கைதடி கிழக்கு, கைதடி.**

(CS/54669) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 10 . 1951



இறப்பு 07 . 04 . 2024

### அமரர் நடேசர் சிவயோகசுந்தரம்
**(சின்னத்தம்பி)**

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு ஜாஎலயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவயோகசுந்தரம் (சின்னத்தம்பி) கடந்த 07-04-2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் எஸ்தர் (ஜாஎல) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான நடேசர் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோபர் நியூமன் - பெறில் நியூமன் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவஞானசுந்தரம் (கனடா), சிவகாம்பிகை, கமலாம்பிகை (ஆச்சி), இராஜேஸ்வரி (பவானி ரீச்சர்), சிவராஜசுந்தரம் (அபுதாபி), ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுரேஸ் (ஜாஎல), சிவசுரேஷினி (லண்டன்), சிவநரேந்திரன் (Colombo - Assistant General Manager Head of Broken Sales of Allianz Insurance Lanka Ltd) ஆகியோரின் அன்புத் தந்தையும், நீற்றா (ஜாஎல), பிரதீபன் (லண்டன்) சாதனா (ஜாஎல) ஆகியோரின் அன்பு மாமனாரும், சொமேஸ், சலோம், அயோன், ஹரிஷ், பவிஷா, எமிஷியா, எவொன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், காலஞ் சென்றவர்களான பாலேந்திரன், உருத்திரமூர்த்தி மற்றும் லக்சுமி, மைதிலி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமரன், நந்தன், ஸ்ரீ பிரணவன் ஆகியோரின் அன்பு சின்னமாமாவும், முகுந்தன், புவனி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது சுதுமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**திருமதி சிவகாம்பிகை பாலேந்திரன் (சகோதரி)**
**021 225 5336**
**076 842 6340**

**பாடசாலை முன்பாக,**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

(CS/54672) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கைக் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பரப்புரைகளை ஆரம்பித்துவிட்டன. சிறிலங்கா பொது ஜன பெரமுன சார்பிலும் ஜனாதிபதி வேட்பாளர் களமிறங்கவுள்ள நிலையில் பிரதான போட்டியாளர்களின் எண்ணிக்கை 4 ஆக மாறியுள்ளது.

இவர்கள் யாரும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் பேசக்கூடியவர்கள் இல்லை. அதைத்தொடுவதற்கும் அவர்கள் தயாராக இல்லை. போர் முடிவடைந்து 14ஆண்டுகளாக நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டேயிருக்கின்றோம். இதனை மாற்றியமைக்கவேண்டும்.

தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதை சிங்களச் சமூகத்துக்கு வலியுறுத்தும் நோக்கமாக, அதேபோன்று இங்குள்ள இராஜதந்திரிகளுக்கு வலியுறுத்தும் வகையிலும் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை வெளிக்கொணரும் முகமாக நாங்கள் ஒரு பொது தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் இணைந்து பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தவேண்டும் என்ற பேச்சுகள் கடந்த 6 மாத காலமாகப் பேசப்பட்டு வருகின்றன.

கடந்த 7ஆம் திகதி வவுனியாவில் நடந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் 4 கட்சிகளும் அதற்கான முன் முயற்சிகளில் அனைத்தையும் நாங்கள் கூட்டாக எடுப்பது என்று தீர்மானித்துள்ளோம். ஒரு பொது வேட்பாளருடைய தேவையை இந்த ஐந்து கட்சிகளும் வலியுறுத்தும் வகையில் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் போட்டியிடுவது தொடர்பிலான கலந்துரையாடல் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதுவரை யார் பொது வேட்பாளர் என்பது பிரேரிக்கப்படவில்லை. ஆனாலும், மதங்களைக் கடந்து வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரே போட்டியிடுவார். மலையகம் மற்றும் முஸ்லிம்களின் ஆதரவை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். அவர்களுடனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சம்மதித்தால் அவர்களுடனும் பேச நாம் தயார். நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஏற்கனவே தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்திவிட்டார். தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படவேண்டும் என்பதில் அவர் உடன்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரை முக்கியமான தலைவர்கள் எமது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக உள்ளனர். அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மாத்திரமே இதற்கு எதிராக உள்ளார் - என்றார். (அ-ஒ-இ)

## அக்குபஞ்சர்...

ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளதாகவும் அக்குபஞ்சர் மருத்துவத்தை மேற்கொள்ளும் கே.டினேஸ் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சிகிச்சைக்காக வந்த ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு உரிய சிகிச்சைகள் வழங்காததால், அவரின் காலில் வீக்கம் ஏற்பட்டுள்ளது. அதற்காக சத்திரசிகிச்சை செய்துள்ளார்கள். அதற்கான ஆதாரங்களை உயிரிழந்தவரின் மனைவி என்னிடம் சமர்ப்பித்துள்ளார். சுயநினைவுடன், நடமாடக்கூடிய நிலையில் இருந்தவரை அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு சென்ற பின்னர் உயிரிழந்த நிலையில் சடலமாகவே உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ். போதனா மருத்துவமனையில் 24 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு உயிரிழந்த நபர், என்னிடம் சிகிச்சை பெற்றதால் தான் உயிரிழந்தார் என ஊடகங்களுக்குச் செய்திகளை வழங்கியுள்ளனர். எமது சிகிச்சை நிலையத்தை தொழிற்பாது செய்வதற்கான சதி நடவடிக்கையாகவே நான் இதனைப் பார்க்கிறேன். எங்களின் சிகிச்சை நிலையத்தில் அவர் உயிரிழக்கவில்லை.

எங்களின் அக்குபஞ்சர் சிகிச்சைமூலம் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. அவற்றை உரிய சுகாதார முறைப்படியேகையாள்கிறோம். அவ்வாறு இருக்க காய்ச்சல் வந்த ஒருவருக்கு எமது சிகிச்சையால் தான் காய்ச்சல் வந்தது எனக் கூறுகின்றார்கள்.

அக்குபஞ்சர் சிகிச்சை முறையில் எந்த விதமான மருந்துகளும் இல்லாமல் நோய்களை நாம் குணப்படுத்துவதால், மருந்துகளை வழங்கி சிகிச்சை வழங்குபவர்களின் வருமானம் பாதிக்கப்படுவதால்தான் தவறான முறையில் எமது சிகிச்சையை விமர்சிக்கின்றனர்.

எனது மருத்துவ சிகிச்சை நிலையத்தை நான் உரிய முறையில் பதிவு செய்தே நடத்தி வருகிறேன். தகுதியான கல்வித் தகைமையுடனே சிகிச்சை வழங்கி வருகிறேன். எனது சிகிச்சையால் யாரும் உயிரிழக்கவில்லை. எமது சிகிச்சை நிலையத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளேன் - என்றார். (அ-ஒ-20)

## சன்ரைசர்ஸ்...

துவத்தால் நேற்று வெளியிடப்பட்டது. இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கவுக்குப் பதிலாக இவர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனான வியாஸ்காந்த் லங்கா பிரீமியர் லீக் போட்டிகளில் ஜப்னா கிங்ஸ் அணி சார்பில் விளையாடி வருகின்றார். அத்துடன், கடந்த ஆண்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் வலைப் பந்து வீச்சாளராகவும் செயற்பட்டிருந்தார். (அ-ஒ-இ)

## யாழ்...

தவறான தகவல்களை வழங்கி நீதிமன்றைப் பிழையாக வழிநடத்தியதாகத் தெரிவித்தே இந்த வழக்கு கடந்தவாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 17ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மாநகர ஆணையாளருக்கு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்களிலிருந்து தெரிவருகின்றது. (அ-ஒ-26)

## யாழ்.நகரப்...

கண்டறிய முடியவில்லை என மருத்துவத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பாடசாலையில் ஒரு வகுப்பில் கல்வியபயிலும் மாணவனுக்கு உடல் மெலிவு ஏற்பட்ட நிலையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அந்த மாணவனுக்கு காச நோய் அறிகுறி இருப்பது கண்டறியப்பட்டதால் அவருடன் நெருங்கிப்பழகிய மாணவர்கள் சிலரைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவர்களுக்கும் காசநோய் இருப்பது தெரியவந்தது. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு துறை சார்ந்த மருத்துவ நிபுணர்களால் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதுடன் தொடர்ந்தும் அவர்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். மாணவர்களுக்கு காச நோயின் ஆரம்ப நிலை காணப்படுவதுடன் உரிய முறையில் சிகிச்சை பெற்றால் ஏனையவர்களுக்கு பரவாமல் தடுக்கமுடியும் எனவும் மருத்துவத்துறையினர் தெரிவித்தனர். (அ-ஒ-27)

## சுமந்திரனை...

லிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாநாட்டுக்குதமிழ்க் கட்சிகளுக்கான அழைப்பை வழங்கினோம். யாருக்கும் தனிப்பட்ட அழைப்பு விடுக்கவில்லை. எம்.ஏ.சுமந்திரனுக்குத் தனிப்பட்ட அழைப்பை எமது கட்சி வழங்கவில்லை. அவராகவே மாநாட்டுக்கு வந்தார். வந்தவரை வரவேற்கும் பண்பின் அடிப்படையில் அவரை வரவேற்றோம்.

ஆனால், வந்த சுமந்திரன் எமது கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவிடம் இந்தியாவைப் போல் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் நமது கட்சியின் தலைவருக்குக் கூறியதாக செய்திகள் வெளி வந்ததாக அறிந்தோம். சமஷ்டியைப் பற்றியோ தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பிலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சம்பந்தன் மற்றும் சிறீதரனை விட நமது கட்சியின் தலைவர் அநுரவுக்கு நன்கு தெரியும். நாம் தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். ஆனால் தனி நபர்களை அழைத்து அரசியல் செய்யும் நோக்கம் எமது கட்சிக்கு இல்லை - என்றார். (அ-ஒ-27)

## கடற்...

வர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன்தினம் கடலுக்குச் சென்றிருந்த மீனவர்கள் கச்சதீவுக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இலங்கைக் கடற்படையினர் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்தால் கைது செய்வோம் என ஒலிபெருக்கி மூலமாக எச்சரித்துவிட்டு, அந்தப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீன்பிடி விசைப்படகுகளை விரட்டியடித்து மீன்பிடி வலைகளையும் அறுத்துச் சேதப்படுத்தினர்.

பின்னர் இரவு 11 மணியளவில் பத்துக்கு மேற்பட்ட விசைப்படகுகளில் ஏறிய இலங்கைக் கடற்படை மீனவர்களைச் சரமாரியாகத் தாக்கியுள்ளனர். மேலும் இலங்கைக் கடற்படையின் பெரிய ரோந்துக் கப்பல்களால் மீன்பிடிப் படகு மீது மோதினர். இதனால் இரண்டுக்கும் மேற்பட்ட படகுகள் சேதம் அடைந்தன. இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த மீனவர்கள் சிலர் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-100)

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 06 . 1953



மறைவு
09 . 04 . 2024

## சத்தியராணி ஜெகதீஸ்வரன் (ராணி)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியராணி ஜெகதீஸ்வரன் நேற்று (09.04.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தவமணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரனின் அன்பு மனைவியும், வாகீசனின் அன்புத் தாயாரும், யனோசியாவின் அன்பு மாமியாரும், தன்ஷிகாவின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி மற்றும் சத்தியயேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கிருஷ்ணமூர்த்தி, கிருபாமூர்த்தி மற்றும் சத்தியபகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், றமணி, சாயீசன், கல்யாணி ஆகியோரின் பாசமிகு சித்தியும், நித்திலன், சண்முகன், வருணன், துலக்ஷன் ஆகியோரின் பாசமிகு குட்டிஅம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மஹிந்த மலர்சலையில் இன்று (10.04.2024) புதன்கிழமை காலை 8.00 மணிதொடக்ம் 11.30 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு 11.30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று 2.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வாகீசன் (மகன்)
077 340 5839

(C354666) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைக்கு...

மாகாணங்களில் மிதமானது முதல் கனமான மழைக்கான வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறையின் மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். "எதிர்வரும் 12[illegible] திகதி இலங்கைக்குத் தெற்கே வளி[illegible] ண்டல மேல[illegible] டுக்கு சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இதன் காரணமாகவே மழைக்கான வாய்ப்புள்ளது. அதிகரிக்கும் வெப்பநிலையைக் குறிப்பிட்ட காலத்துக்கு இம் மழை தணிக்கும் என்பதால் இம் மழை எமக்கு மிகவும் அவசியமானதாகும்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-66)

Techna
Technical institute
Smart thinking leads to innovate
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

A/L தொழினுட்பப்பிரிவு

A/L 2024 DAY CLASS ஆரம்பம்

17.04.2024 புதன்கிழமை, மாலை 3.30 மணிக்கு


| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | - M.விஷ்ணு, P.நிறோஜனன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | - S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - S.சக்தி |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்(ICT) | - T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஜீபன் |
| கணிதம் 07 | - T.சசிகரன் |
| புவியியல் | - S.P.கரன் |

A/L 2025, 2024 பிரிவுகள் நடைபெறுகின்றன.

2025 பிரிவினருக்கான BSTவகுப்புக்கள் இலவசமாக நடைபெறுகின்றது.

077 170 3549

# மரண அறிவித்தல்



தோற்றம்
15.07.1942

மறைவு:
08.04.2024

## செல்வரத்தினம் பரமேஸ்வரி

யாழ் நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் "மணி பவனம்" கல்லூரி வீதி காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது புதிய லேன் கொக்குவில் கிழக்கில் வசித்தவருமாகிய செல்வரத்தினம் பரமேஸ்வரி (மணியக்கா) அவர்கள் நேற்று முன்தினம் (08.04.2024) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய தபாலதிபர் செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், யோகராஜா, தனலக்ஷ்மி, காலஞ்சென்றவர்களான செல்வராணி, நவரட்ணராஜா, தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஷ்பமலர், உமாராணி, கணேந்திரராஜா, காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், சின்னத்துரை, யோகராணி, யோகநாதன் ஆகியோரின் அருமை மைத்துனியும், ராகவன், ரமேஷ் (லண்டன்), ரமணன் (கனடா), ராஜி (ஜேர்மனி), ரமா காலஞ்சென்ற ரகு ஆகியோரின் அன்புத்தாயாரும், பூரணா, விஜயா, ரேகா, ஜெனோகரன், ஜெயமோகன் ஆகியோரின் அன்பு மாமியும், பிரணவன், பிரவீனன், சஞ்சீவி, கோமருதன், நிகிலேஷ், சிந்துஜன், லக்ஷ்னா, அபினுஷா, அகிஷன், அனிஷ், வர்ஷா, ரோஜிகன் ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (11.04.2024) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் . இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ராகவன் (மகன்) - +94 (0) 77 075 7641
ஜெயமோகன் (மருமகன்) - +94 (0) 77 939 8876

(CS/54676) J-1

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு முன்பாக 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- மருதனார்மடம் இராமநாதன் கலைக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- ஒரு பரப்பின் விலை 35 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்:

காலை 06.00 மணிதொடக்கம்
மாலை 06.00 மணிவரை

தொடர்புகளுக்கு:
ஜெயம்
077 814 7389, 077 986 5457

(CS 1169) V-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

பிறப்பு
29.08.1959



இறப்பு
08.04.2024

சுருதி வேந்தன் - வயலின் வித்துவான்

## அம்பலவாணர் ஜெயராமன்

(ஓய்வுநிலை யாழ். பொதுசன நூலக புத்தக செவ்வை பார்ப்பவர்)

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் நேற்றுமுன்தினம் (08.04.2024) திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (மிருதங்க வித்துவான்) - காமாட்சியம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக்கணவரும், சாரங்கன் (Ceylon Steel Corporation Ltd Area Sales Officer), சைந்தவி (செலான் வங்கி - சுன்னாகம்), சாருகேசி (ஆசிரியை - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரகுநாதன் (மிருதங்க வித்துவான்-கொழும்பு), சந்தானலட்சுமி (கொழும்பு), இராமச்சந்திரன், ஸ்ரீநிவாசன் (லண்டன்), சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மயூறி, மிறோஜன் (ICBT Jaffna Campus) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயக்குமார் (கொழும்பு), இராஜலக்சுமி (கொழும்பு), விமலரஞ்சினி (லண்டன்), ஞானகலாவதி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற போதகர் ஸ்ரீபன் மகேஸ்வரன், நிர்மலகுமாரி, விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீமுருகன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஆறகனின் அன்புப் பேரனும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்: குடும்பத்தினர்

இல. 07 கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

077 028 7132
021 221 9762



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.